ஸ்ரீராம ஜெயம்
சுப.ராமநாதன் (SP.R)
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
நாட்டரசன்கோட்டை 1922-2003

# திருமலை தல வரலாறு



ஆக்கம் சு. கண்ணன்

உதவி கு. சக்திவேலன், வே. பாலகுமரேசன்.

உ

சிவமயம்

# திருமலை தல வரலாறு



ஆக்கம்

சு. கண்ணன், M.A. (தொல்லியல்)

உதவி

கு. சக்திவேலன், B.Sc.,

வே. பாலகுமரேசன், B.A.

முதற்பதிப்பு : 7-9-1992

பதிப்புரிமையுடையது

**RS; 6-00**

கதிரொளி அச்சகம்
24-A, பூக்கார சந்து, மேல ஆவணி மூலவீதி, மதுரை-1.



மேதகு ராணி
ராஜலெட்சுமி ரெகுராஜ் அவர்கள்

# உள்ளுறை


| | | |
|---|---|---|
| 1. | திருமலையின் அமைவிடம், சூழல் வரலாற்றுச் சிறப்பு | 1 |
| 2. | குடைவரைக் கோயில் | 16 |
| 3. | மலைக்கொழுந்தீஸ்வரர், பாகம்பிரியாள் கற்றளிகள் | 26 |
| 4. | கல்வெட்டுத் தொகுதி | 30 |
| 5. | பிற்சேர்க்கை | 39 |
| | அடிக்குறிப்புகள் | |

# அணிந்துரை

திருமலை எழில்மிகு சூழலில் குன்றின்மேல் அமைந்த ஒரு திருக்கோயில். இக்கோயில் சிறியதே எனினும் கீர்த்தியில் மிகப்பெரியது.

தொல்பொருள் ஆராய்ச்சியாளர்கள் இந்தக் கோயிலின் காலத்தை தொன்மையானதென்று கூறுகிறார்கள். திருமலை முற்காலத்தில் 'குன்றத்தூர்' என்ற பெயரில் வழங்கப்பட்டு வந்தது.

இந்நூலாசிரியர் சிறந்த தொல்பொருள் மற்றும் வரலாற்றுக் குறிப்புகளை நன்கு தொகுத்துக் கொடுத்திருக்கிறார். அவருக்கு எங்கள் சமஸ்தான தேவஸ்தானத்தின் சார்பில் பாராட்டுகள். திருமலைக்குன்றின் உச்சியில் காணப்படும் மிகப் பழமையான பாறை ஓவியங்களைப் பற்றி விளக்கமாக எழுதியுள்ளது பாராட்டப்படத்தக்கது. இது வரை யாருமே வெளிச்சத்திற்குக் கொண்டுவராத உண்மை இவை.

இத்துடன், திருக்கோயிலின் ஆன்மிகச் சிறப்பு ஒரு பக்கமிருக்க, ஆய்வுலகப் பார்வையினை இக்கோயிலின் பக்கம் திருப்பக்கூடிய சான்றுகள் பல இந்நூலில் உள்ளன.

திருமலைக் குடைவரைக் கோயில் பாறையைக் குடைந்து உருவாக்கப்பட்டுள்ளது. இது கி.பி. 600-900 காலத்திற்குட்பட்ட பாண்டியர் காலத்து கலை அமைப்பு. தொல்பொருள் ஆராய்ச்சியாளர்கள் 'குகைக் கோயில்களின் முன்னோடிகள் பல்லவர்களே' என்று கூறுகிறார்கள். ஆனால் பாண்டிய நாட்டுக் குகைக் கோயில்களும் பல்லவர்களின் படைப்பைப் போன்றே உள்ளன. அவற்றுள் திருமலையும் ஒன்று.

திருமலையில் மற்றொரு கோயில் இருந்திருக்கின்றது. அதனின் சான்றுகள் திருமலைக் கல்வெட்டுக்களில் காணப் படுகின்றன. அது வடகள வழிநாட்டு அளகை மாநகர சூரதேவ ஈஸ்வரன் உடையார் கோயில் என்று குறிக்கப் பட்டுள்ளது. அக்கோயில் இப்பொழுது திருக்கோட்டியூரில் சரபேஸ்வரர் என்ற திருப்பெயரில் எழுந்தருளியிருக்கிறது. திருக்கோட்டியூர் சரபேஸ்வரர் திருக்கோயிலில் உள்ள கல் வெட்டுக்களில் இருந்து இது தெரியவருகிறது என்று தொல் பொருள் ஆராய்ச்சியாளர் திரு. ஏ வி. ஜெயச்சந்திரன் குறிப்பிடுகிறார். திருமலையில் இருந்த இந்த திருக்கோயில் அப்படியே பிரிக்கப்பட்டு திருக்கோட்டியூரில் எழுப்பப்பட்டிருக் கிறது. திருக்கோட்டியூர் கேரளசிங்க வள நாட்டைச் சேர்ந் தது. ஆனால் இந்த கோயிலில் குறிப்பிடப்பட்டுள்ளதோ வட களவழி நாட்டைச் சேர்ந்த கோவில் என்பது.

ஆசிரியரின் அரும் முயற்சியினைப் பாராட்டி வாழ்த்து கிறேன். தமிழ்நாட்டு ஆலயங்கள் ஆன்மிக ஒளி பரப்பும் அருள்நிலையங்கள் என்பதோடு, இந்த நாட்டின் கலை, கலாச்சாரம், நாகரிகம் ஆகியவற்றைப் பேணிக் காக்கும் மையங்களாகவும் நமது வரலாற்றை பாதுகாத்து வைத் திருக்கும் வரலாற்றுப் பெட்டகங்களாகவும் உள்ளது என்ப தற்கு திருமலை ஒரு சிறந்த எடுத்துக்காட்டாகும்.

ராஜகுமாரி ராஜலக்ஷ்மி ரெகுராஜ்
சிவகங்கை சமஸ்தான தேவஸ்தானத்தின்
இளைய பரம்பரை அறங்காவலர் காப்பாளர்.

# முன்னுரை

சிவகங்கை சமஸ்தான தேவஸ்தானத்தின் நிர்வாகத் திற்குட்பட்ட ஆலயங்கள் 84ம் 22க்கு மேற்பட்ட கட்டளை களும் சிறந்த முறையில் பேணப்பட்டு இந்தப் பகுதியின் ஆன்மீக வளத்தைப் பர்ப்பி வருகிறது.

மூர்த்தி தலம் தீர்த்தம் முறையாய் தொடங்கினோர்க்கு வார்த்தை சொல் சற்குருவும் வாய்க்கும் பராபரமே என்பார் தாயுமானார்.

மூர்த்தி தலம், தீர்த்தத்தால் சிறந்த பல திருத்தலங் கள் சமஸ்தான தேவஸ்தானத்தில் உள்ளன. சைவ சமயச் சாரியார்களால் பாடப்பெற்ற திருக்கானப்பேரும் (காளையார் கோயில்) திருப்புவனமும் வைணவ ஆழ்வார்களால் மங்களா சாசனம் செய்யப்பெற்ற திருக்கோட்டியூரும், மாறநாயனாரின் அவதாரத்தலமாகிய இளையான்குடியும், மூர்த்திநாயனாரின் அவதாரத்தலமாகிய மார்த்தூரும் பெருமையுடைய திருத் தலங்கள்.

ஆற்றோரத் திருத்தலங்களாக திருப்புவனம், திருப்பாச்சேத்தி, மானாமதுரையும் திகழ்கின்றன. திருப்பு வனம் இறைவனின் திருவிளையாடலுக்கு ஆட்பட்ட இடம். திருஞானசம்பந்தரும், சமணர்களும் புனல்வாதம் செய்த போது சம்பந்தரின் ஏடு ஆற்றை எதிர்த்து திருவேடகம் சென்றடைந்ததெனவும், சமணர்களின் ஏடு ஆற்றோடு சென்று திருப்பாச்சேத்தியை அடைந்தது எனவும் வரலாறு உண்டு. மானாமதுரை சதாசிவ பிரம்மேத்திரரின் அதிஷ் டானத்தைக்கொண்ட இடமாகவும் திகழ்கிறது.

வேண்டுவோர் வேண்டுவதெல்லாம் வழங்கும் சக்தி படங்களாக நாட்டரசன் கோட்டை கண்ணுடைய நாயகியும்

திருவெற்றியூர் பாகம்பிரியாளும் அருள்பாலித்து வருகிறார்கள்.

குன்றின்மேலிட்ட விளக்காக ஒளிவீசும் கோயில்களும் உண்டு அவை திருமலை, ஏரியூர் ஆகும்.

திருமலையின் குடமுழுக்கு, அன்பர்கள் பலரின் பெரு முயற்சியாளும் தேவஸ்தானத்தின் பரம்பரை அறங்காவலர் இளைய தலைமுறையின் காப்பாளர் மேதகு இராஜகுமாரி ராஜலெக்ஷ்மி ரெகுராஜ் அவர்களின் ஆதரவோடும் மிகச் சிறப்பான முறையில் நடைபெறவுள்ளது. அதற்காக இந் நூல் மலர்கிறது.

அருள்தரும் பாகம்பிரியாள் உடனாய மலைக் கொழுந்தீஸ்வரர் திருவருளைப் பெற்று உலகத்தில் அமைதி நிலவி வளமை பெருக பிரார்த்திக்கிறோம்.

வே. திருவரங்கராசன், பி.ஏ.
செயலர், மன்னர் பள்ளிகள்
சிவகங்கை

# நூன்முகம்.

வரலாறும் தொல்லியலும் மிகுதியாகப் புறக்கணிக்கப் பட்டு வரும் இந்நாளில் அவற்றின் சிறப்பை உணர்த்த குறைந்த அளவிலேயே நூல்கள் வெளிவருகின்றன. இவ் வேளையில் 'திருமலை தல வரலாறு' என்ற இந் நூல் வெளியிடப்படுவதில் மிக்க மகிழ்ச்சியடைகிறேன். இந்நூலில் திருமலையின் வரலாற்றுச் சிறப்பினை தக்க ஆதாரங்களு டன் எடுத்துக்கூற விழைந்துள்ளேன். இச்சிறிய பணியில் மாணவனாகிய நான், என்னால் இயன்ற அளவு வரலாற்றுச் செய்திகளை தொகுத்து அளித்துள்ளேன். இப் பணியில் தவறுகள் இருப்பின் அவற்றை சிரம் தாழ்த்தி ஏற்கிறேன். இந்நூலினை வெளியிட எனக்கு ஆதரவு நல் கிய மேதகு ராணி ராஜலெட்சுமி ரெகுராஜ் அவர்களுக்கும் தேவஸ்தான மேலாளர் திரு. ரத்னாகரன, B A., B.L., அவர்களுக்கும், சிவகெங்கை சமஸ்தான தேவஸ்தானத் திற்கும் என் முதற்கண் நன்றி. திருமலைக் கோயிலைப் பற்றிய செய்திகளை அளித்து உதவிய திரு. சுப்பிரமணிய குருக்கள், திரு முத்துசாமி குருக்கள் அவர்களுக்கும் மனமார்ந்த நன்றிகள். மேலும் இந்நூல் வெளிவருவதில் என்னோடு பெரும் பங்காற்றிய திரு. மு ராமலிங்கம், திரு. மு. சுந்தரம், திரு மு கண்ணன், D.M.E. அவர்களுக்கும் நன்றிகள் பல. கள ஆய்வுகளில் என்னோடு பங்கேற்று இந்நூலினை வடிவமைக்க எனக்கு பேருதவியாக இருந்த நண்பர்கள் கு சக்திவேலன், B.Sc., வே. பாலகுமரேசன், B.A, அவர்களுக்கும் நன்றி. இந்நூல் வெளிவருவதில் மிக ஆர்வம் கொண்டு எங்களோடு தோள் கொடுத்து உதவிகள் பல செய்த அய்யா திரு. மு. ஆ. கிருஷ்ணக் கோன் அவர்களுக்கும் என்னுடைய நன்றி. இந்நூலிலுள்ள புகைப்படங்களை எடுத்த நண்பர் திரு. சுந்தர் அவாகளுக்

கும் நன்றி. அழகிய வரைபடங்களை வரைந்துஉதவிய நண்பர் திரு. கு. சக்திவேலன், B.Sc., அவர்களுக்கும் நன்றிகள் பல. இந்நூலை அச்சிட்டு வழங்கிய கதிரொளி அச்சகத்தின் உரிமையாளர் திரு. ஸ்ரீனிவாசன் அவர்களுக்கும் நன்றி. எனக்கு ஊக்கமும் உதவியும் நல்கிய நண்பர்கள் அனைவருக்கும் நன்றி உரித்தாகுக!

மதுரை
7-9-1992

க. கண்ணன், M.A.
(தொல்லியல்)

# 1. திருமலையின் அமைவிடம், சூழல், வரலாற்றுச் சிறப்பு

பசும்பொன் முத்துராமலிங்கம் மாவட்டத்திலுள்ள சிவகங்கை வட்டத்தில் சிவகங்கையிலிருந்து கட்டாணிபட்டி செல்லும் சாலையில் ஏறக்குறைய இருபத்தோரு கிலோ மீட்டர் தொலைவில் அமைந்துள்ள சிற்றூர் திருமலை. சிவகங்கையிலிருந்து நேராகத் திருமலை செல்லும் பேருந்துகளிலும், கட்டாணிபட்டி செல்லும் பேருந்துகளிலும் இவ்வூருக்குச் செல்லலாம். இவ்வூர் மதுரையிலிருந்து சுமார் ஐம்பத்தி நான்கு கிலோ மீட்டர் வடகிழக்கில் அமைந்துள்ளது. மதுரையிலிருந்து உறங்கான் பட்டி வழியாக மதகுபட்டி, பாகனேரி மற்றும் கல்லல் செல்லும் பேருந்துகளில் சென்றால் ஐம்பத்தி இரண்டாவது கிலோ மீட்டர் தொலைவில் அழகமாநகரி என்ற சிற்றூரைக் கண்டிடலாம் அழகமாநகரியில் இறங்கித் தென்புறமாகச் செல்லும் சாலையில் இருபது நிமிடம் நடந்தால் திருமலையை அடையலாம். நெடுஞ் சாலையிலிருந்து சற்று விலகி அமைந்துள்ளதாலும் போக்குவரத்து வசதி குறைவாக உள்ளதாலும் திருமலை வரலாறு, தொல்லியல் துறைகளின் ஆய்வாளர்களால் புறக்கணிக்கப்பட்டுள்ளது. திருமலை மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளில் கள ஆய்வுகள் நடத்தியதில் பல பயனுள்ள தொல்லியல் தடயங்கள் கிடைத்துள்ளன.

திருமலையிலுள்ள குன்று, ஊருக்கு வடக்கில் கிழக்கு–மேற்குத் திசையில் அமைந்துள்ளது. திருமலைக் குன்று, கிரனைட் (Granite Rock) என்றழைக்கப்படுகிற கடினமான பாறைகளால் உருவானதாகும். மனிதன் வரலாற்றுக்கு

முற்பட்ட காலத்தில் மலைகள் மற்றும் குன்றுகளோடு கூடிய காட்டுப்பகுதிகளில் தங்கி வேட்டையாடி வந்தான். குன்றுகளிலிருந்த பாறைகளைக்கொண்டு தனக்குத் தேவையான கற்கருவிகளைச் செய்துகொண்டான். மேலும் மழை புயல் காலங்களில் மலைகளிலும் குன்றுகளிலும் இயற்கையாக அமைந்திருந்த குகைகளில் தங்கிக்கொண்டான். எனவே குன்றுகளிலும் அதனையொட்டிய பகுதிகளிலும் மனிதனின் தடயங்கள் மிகுந்த அளவில் கிடைக்கின்றன. வரலாற்றுக் காலத்திலும் கூட குன்றுகள் மிகவும் இன்றியமையாத இடங்களாகக் கருதப்பட்டன. தமிழகத்தில் சமண சமயம் வளரத் தொடங்கிய போது சமணத் துறவிகளுக்கென்று ஒதுக்குப்புறமான குன்றுகளிலுள்ள இயற்கைக் குகைகளில் பாழிகள் ஏற்படுத்தப்பட்டமையை வரலாற்றின் வாயிலாக அறிகிறோம். பின்னர் பல்லவர்கள் காலந்தொட்டு குன்றுகளில் குகைக் கோயில்கள் குடையப்பட்டன; திறந்தவெளிப்பாறைச் சிற்பங்கள் செதுக்கப்பட்டன. திருமலைக் குன்றும் எல்லாக் கால கட்டங்களிலும் மனிதனோடு இணைந்து வந்துள்ளது என்பதைப் பிரிதோர் இடத்தில் காணலாம்.

திருமலைக்கு அருகில் ஆறுகள் எதுவும் இல்லையென்றாலும் அதனைச் சுற்றி மிகுதியான நீர்நிலைகள் காணப்படுகின்றன. இதன் காரணமாகவே மனிதன் திருமலையின்பால் ஈர்க்கப்பட்டிருக்க வேண்டும். வரலாற்றுக்கு முற்பட்ட காலத்திலும் வரலாற்றுக் காலத்திலும் இப்பகுதியில் வாழ்ந்த மனிதனுக்குத் திருமலையும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளும் அடிப்படைத்தளமாகப் பயன்பட்டிருக்க வேண்டும். எனவேதான் அவனின் நாகரிகத் தடயங்கள் அங்கே கிடைத்துள்ளன. திருமலைக் குன்றின் உச்சியிலிருந்து நோக்கினால் அவ்வூரின் நில, நீர் நிலை அமைப்புகள் தெளிவாகத் தெரியும். குன்றுக்குக் கிழக்கே ஆசாரி கண்மாயும், தென்கிழக்கே

ஏனான் கண்மாயும், தெற்கே பொன்னாட்சிக் கண்மாயும், மேற்கே திருமலை, கோனேரிக் கண்மாய்களும், வடக்கே அருகில் தாமரைக் குளமும், தொலைவில் பூலான்குடிக் கண் மாயும், வடகிழக்கே பொய்காலிக் கண்மாயும் அமைந்துள் ளன. இவ்வாறாகத் திருமலையைச் சுற்றி எல்லாத் திசை களிலும் ஏரிகள் காணப்படுகின்றன.

திருமலை என்றழைக்கப்படுகின்ற சிற்றூர் கி.பி. 13ஆம் நூற்றாண்டில் பாண்டியப் பேரரசின் வடகளவழி நாட்டி லிருந்த அழகைமாநகரின் ஒரு பகுதியாக இருந்து வந்த தென்பதையும், அந்நாளில் திருமலைக் குன்றும் அதை ஒட்டிய பகுதிகளும் 'குன்றத்தூர்' என்ற பெயரால் அழைக்கப் பட்டு வந்ததென்பதையும் திருமலையிலுள்ள மலைக் கொழுந்தீஸ்வரர் கோவில் கல்வெட்டுக்களின் வாயிலாக அறிகிறோம்.[1]

திருமலையின் வரலாறு காலத்தால் மிகப் பழமையான தாகும். அதன் வரலாறு நேற்றோ இன்றோ தொடங்கிய வரலாறன்று இவ்வூரில் வரலாற்றிற்கு முற்பட்ட காலத்தில் வாழ்ந்த மனிதனின் நாகரிகத் தடயங்களில் இருந்து 14ஆம் நூற்றாண்டைச் சார்ந்த பாண்டியர்களின் கல்வெட்டுக்கள் வரை கிடைத்துள்ளன. மேலும் இவ்வூர் மனிதனால் கை விடப்படாமல் தொடர்ச்சியாக அவனின் நாகரிகத்தின் கீழ் இருந்து வந்துள்ளதென்பதை நமக்குக் கிடைத்துள்ள தொல் லியல் ஆதாரங்களைக் கொண்டு சொல்லலாம். திருமலையில் காணப்படும் பழங்கால மனிதன் வரைந்த எளிய குகைஓவியங் களும், சங்ககால (பெருங்கற்கால) மக்கள் இறந்தோரைப் புதைக்கப் பயன்படுத்திய தாழிகளும், சமணர்கள் உறைவதற் கென வெட்டிய கற்படுக்கைகளும், தமிழ்பிராமிக் கல்வெட்டுக்

களும், 8ஆம் நூற்றாண்டைச் சார்ந்த குடைவரைக் கோயிலும், 12ஆம்நூற்றாண்டைச் சார்ந்த மலைக்கொழுந்தீஸ்வரர் சுற்றளியும், 12, 13, 14ஆம் நூற்றாண்டுகளைச் சார்ந்த கல்வெட்டுக்களும் இவ்வூர் எவ்வகையில் சிறந்ததென்பதையும் இதன் வரலாற்றுச் சிறப்பு யாதென்பதனை நமக்கு நன்கு உணர்த்தும். இந்த அத்தியாயத்தில் பழங்காலக் குகை ஓவியங்கள், பெருங்கற்காலத்தாழிகள், சமண கற்படுக்கைகள் மற்றும் தமிழ்பிராமிக் கல்வெட்டுக்களைப் பற்றி விரிவாகக் காண்போம்.

## பழங்காலக் குகை ஓவியங்கள் :

தமிழகத்தில் பழங்காலக் குகை அல்லது பாறை ஓவியங்கள் மிகக் குறைந்த அளவில் மல்லப்பாடி (தர்மபுரி) ஆலம்பாடி, கீழ்வாலை, பாடியேந்தல், செத்தவரை (தென்னாற்காடு), சென்னராயன்பளளி (வடஆற்காடு), வேட்டைக்காரன்மலை (கோயம்புத்தூர்) கோவோனக்கரை (நீலகிரி), சிறுமலை (மதுரை) போன்ற இடங்களில் மட்டுமே கிடைத்துள்ளன.[2] இவ்வரிசையில் திருமலையும் இடம் பெறக் காத்துநிற்கிறது. இன்னும் முறையாகப் படிக்கப்படாத, வெளியிடப்படாத திருமலையின் பழங்காலக் குகை ஓவியங்கள் அவ்வூரின் மிகத் தொன்மையான நாகரிகச் சின்னமாக விளங்குகின்றன.

செம்பாறாங்கல்லினை நன்கு நொறுக்கிப், பொடியாக்கிச், சல்லித்து எடுக்கப்பட்ட மென்மையான பொடியுடன் சிறுநீரையோ, விலங்குகளின் கொழுப்பையோ, தாவரங்களின் வேர் அல்லது இலைகளிலிருந்து பெறப்பட்ட நீரையோ குழப்பி ஓவியத்திற்கான வண்ணம் பெறப்பட்டிருக்க வேண்டும்.[3] பின்னர் கைவிரலைக் கொண்டோ,

தாவரத்தண்டினால் செய்யப்பட்ட தூரிகைகளைக்கொண்டோ கற்கருவிகளைக் கொண்டோ ஓவியங்கள் பாறைகளின் மீது தீட்டப்பட்டிருக்க வேண்டும். கைகளுக்கு எட்டாத தொலைவில் மிக உயரத்தில் வரையப்பட்டுள்ள ஓவியங்கள்சில நீண்ட குச்சியின் உதவியால் தீட்டப்பட்டிருக்கலாம். ஏனெனில் அவ்வோவியங்களின் கோடுகள் கட்டுப்படுத்த முடியாத அசைவின் காரணமாகச் சீராக வரையப்படவில்லை.

திருமலை ஓவியங்களைத் தீட்டுவதில் இரண்டு வகையான முறைகள் கையாளப்பட்டுள்ளன. முதல் வகையில் உருவங்கள் வண்ணத்தால் முழுமையாகத் தீட்டப்படாமல் அவற்றின் வடிவ அமைப்புகள் மட்டுமே மெல்லிய கோடுகளால் வரையப்பட்டுள்ளன. இரண்டாவது வகையில் உருவங்கள் வண்ணத்தால் அழகுற முழுமையாகத் தீட்டப்பட்டுள்ளன. சில ஓவியங்களில் இவ்விரு முறைகளும் கையாளப்பட்டுள்ளமை இங்குக் குறிப்பிடப்பட வேண்டிய சிறப்புக்குரியது.

திருமலை ஓவியங்கள் அனைத்தும் பழங்கால மனிதன் இயற்கைச் சீற்றத்தின் போது தற்காலிகமாக தங்கிச்சென்ற மலைக்குகைகளின் சுவர்களில் காணப்படுகின்றன. மனிதன் தற்பாதுகாப்பிற்காகத் தேர்வு செய்த குகைகளிலுள்ள இப்பாறை ஓவியங்களும் மழை, வெயில் போன்ற இயற்கைச் சக்திகளால் அதிகம் அழிக்கப்படாமல் நன்முறையில் விளங்குகின்றன. மனிதன் ஏன் இவ்வகையான ஓவியங்களைத் தீட்டினான் என்ற கேள்வி இன்னும் விவாதத்திற்குரியதாக இருந்து வருகிறது.[4] சிலர் தான் தங்கிச் சென்ற குகைகளை அழகு செய்யும்பொருட்டு ஓவியங்களை அவன் தீட்டினான் என்கின்றனர். சிலரோ தான் கண்ட பொருள்களின் உருவங்களைக் குகைகளில் தீட்டினான் என்கின்றனர். இன்னும்

ஒரு சாரார் தன் வாழ்வில் ஏற்பட்ட நிகழ்ச்சிகளில் சிலவற்றை நினைவுகூரும் பொருட்டு பழங்கால மனிதன் ஓவியங்களை வரைந்தான் எனக் கூறுகின்றனர். ஒரு சிலர் தான் வரையும் உருவங்களின் இனம் பெருகும் என்ற மூடநம்பிக்கையில் வரைந்ததாகக் கூறுகின்றனர். இவற்றில் எந்தக் கூற்று சரியானதென்பது நமக்குத் தெரியாததென்றாலும் பழங்கால மனிதன் ஓவியங்களை வரையக் கற்றிருந்தான் என்பதையும் அவ்வோவியங்கள் அவனின் வாழ்க்கை முறையைப் பற்றிக் கூறுகின்றன என்பதையும் மறுக்க முடியாது. மேலும் அவன் கூரிய பார்வையையும் தேர்ச்சியான கைகளையும் பெற்றிருந்தான் என்பதையும் இவ்வோவியங்கள் உணர்த்துகின்றன.[5]

திருமலையைச் சுற்றியிருக்கின்ற அகன்ற பகுதிகளிலுள்ள நிலங்களில் மிகுதியான செம்பாறாங்கல் காணப்படுகின்றன. இரும்புத்தாதினைக் கொண்ட இக்கல்லினைப் பொடி செய்து பெறப்பட்ட செந்நிற (காவி நிற) வண்ணத்தால் திருமலைக் குகை ஓவியங்கள் தீட்டப்பட்டுள்ளன. கீழ்வாலை, பாடியேந்தல், செத்தவரை ஓவியங்களும் இதே நிற வண்ணத்தால் தீட்டப்பட்டுள்ளதை இங்குக் குறிப்பிடுதல் நன்று. திருமலைக் குன்றில் நான்கு இடங்களில் பழங்காலக் குகை ஓவியங்கள் காணப்படுகின்றன.

மலை அடிவாரத்தில், மலைக்கு மேற்குப்புறத்திலுள்ள 'சறுக்கும் பாறை'க்கு எதிரிலுள்ள பெரிய குன்றின் கிழக்குப் பகுதியில் ஓவியங்கள் சில காணப்படுகின்றன குகையின் சுவரில் மனிதன் ஒருவன் மிருகம் ஒன்றின் மீது இருப்பதைப் போலத் தீட்டப்பட்டுள்ள ஓவியம் கைக்கு எட்டும் உயரத்தில் உள்ளது மிருகத்தின் கோடுகள் சில இடங்களில் சரிவரத்

தெரியவில்லை. உருவத்தின் சிறிய நீள்வட்டமான தலையின் நடுவே புள்ளியால் கண் வரையப்பட்டுள்ளது. உருவத்தின் உடல் நிமிர்ந்த உடுக்கை வடிவில் வரையப்பட்டுள்ளது. உடலின் மேலும் கீழும் காணப்படுகின்ற சாய்கோடுகள் உருவம் உடையணிந்திருப்பதைக் காட்டுவதாக அமைந்துள்ளது. உருவத்தின் ஒவ்வொரு கையிலும் மூன்று விரல்கள் வரையப்பட்டுள்ளன. உருவத்தின் தலையின் மீது மயிர்கள் நீண்டு குத்திட்டு நிற்கின்றன.

அடுத்ததாகக் குன்றின் உச்சியிலுள்ள பம்பரமலைக்குக் கிழக்கேயுள்ள பாறையின் கீழ் அமைந்துள்ள குகையின் வடக்குச் சுவரில் இரு ஆண் உருவங்களின் ஓவியம் கைக்கு எட்டும் அளவில் தீட்டப்பட்டுள்ளன. இவ்வோவியத்தில் உருவங்கள் இரண்டும் எதிரெதிரே பார்த்தவண்ணம் வரையப்பட்டுள்ளன. தலையானது முந்திய ஓவியத்தைப் போல் நீள்வட்டமாக அமைக்கப்படாமல் குறுக்குக் கோடாகக் காட்டப்பட்டுள்ளது. ஆனால் உடல் நிமிர்ந்த உடுக்கையினைப் போன்றே தீட்டப் பட்டுள்ளது. உருவங்கள் இரண்டும் மற்போர் புரியும் வீரர்களைப் போன்றுள்ளன. திருமலையிலுள்ள பழங்காலக் குகை ஓவியங்களிலே இவ்வோவியம் மட்டுமே மிக நல்ல முறையில் அழிவேதுமின்றிக் கிடைத்துள்ளது.

பம்பரமலைக்குத் தென்கிழக்கிலுள்ள குகையின் சுவர் முழுவதும் ஓவியங்கள் நிறைந்துள்ளன. திருமலையில் மிகுதியான பாறை ஓவியங்கள் கிடைக்கும் குகை இதுவாகும். குகைச் சுவரின் வலதுபக்கத்தில் கை கோர்த்தவாறு இரண்டு சிறிய ஆண் உருவங்களும், அவைகளுக்குக் கீழே நீண்ட ஆண் உருவமொன்றும் அதற்கு அருகில்

அழகுறத் தீட்டப்பட்ட மானும் காணப்படுகின்றன. மானின் தலைப் பகுதியிலுள்ள வண்ணம் அழிந்துள்ளதால் அதனுடைய தலையும் கொம்புகளும் அங்குமிங்கும் தென்படுகின்றன. இதற்குக் கீழே மூன்று ஆண் உருவங்கள் கைகோர்த்த நிலையில் தீட்டப்பட்டுள்ளன. உருவங்களுக்கு அருகில் சற்றுக் கீழே அழகிய சிறுமானொன்றும் தீட்டப்பட்டுள்ளது. இக்காட்சி மானை வேட்டையாட அம்மூவரும் சூழ்ந்துள்ளதைப் போல அமைந்துள்ளது. ஆனால் அவர்களின் கைகளில் ஆயுதங்கள் காணப்படவில்லை. அம்மூன்று உருங்வகளுக்கு அருகிலும், மானுக்கு கீழும் உருவங்கள் தீட்டப்பட்டதற்கான அறிகுறிகள் தென்படுகின்றன. ஆனால் உருவங்கள் மிகவும் மங்கிய நிலையில் காணப்படுகின்றன. இவ்வோவியத்தில் உருவங்களின் தலையும் கழுத்தும் ஒரே புள்ளியாகத் தீட்டப்பட்டுள்ளது. உருவங்களின் உடலமைப்பு நிமிர்ந்த உடுக்கை போல வரையப்பட்டுள்ளது. குகையின் இடது பக்கத்தில் நீண்ட உடலமைப்பினைக் கொண்ட அழகிய பெண்ணின் உருவமொன்றும் ஆணின் உருவமொன்றும் அருகருகே முழுமையாகத் தீட்டப்பட்டுள்ளன. பெண்ணின் உருவம் ஆணை விடச் சற்று உயரமாக உள்ளது. பெண்ணுருவம் தன்னுடைய வலக்கையை மடக்கி உயர்த்தியும் இடக்கையை சீராக நீட்டியும் உள்ளவாறு தீட்டப்பட்டுள்ளது. உருவத்தின் கை மற்றும் கால்களில் ஐந்து விரல்கள் கோடுகளாகத் தீட்டப்பட்டுள்ளன. பெண்ணின் தலைமுடி கொண்டை வ்டிவில் அழகுற வரையப்பட்டுள்ளது. சில மயிர்கள் குத்திட்டுத் தொங்கிய நிலையில் வரையப்பட்டுள்ளன. அருகே வரையப்பட்டுள்ள ஆண் தனது வலக்கையை சீராக நீட்டியும் இடக்கையை மடக்கியும் உள்ள நிலையில் வரையப்பட்டுள்ளான். அவனின் தலைமயிரும் குத்திட்டுத் தொங்கி நிற்கிறது. இரு உருவங்களின் தலை மற்றும் கழுத்துப் பகுதி நன்கு தீட்டப்பட்டுள்ளது. இவ்விரு

உருவங்களைச் சுற்றி மங்கலாகப் பல சிறிய உருவங்களும் விலங்கொன்றும் காணப்படுகின்றன. பாறையிலுள்ள ரசாயனத் தாதுவின் வினைபுரிந்து வரும் மழைநீரால் இக்குகையிலுள்ள ஓவியங்கள் அனைத்தும் அழிக்கப்பட்டு வருகின்றன

இறுதியாக பம்பரமலைக்குத் தெற்கில் அமைந்துள்ள குகையின் சுவர்களிலு கற்கால ஓவியங்கள் காணப்படுகின்றன. சுவரின் கீழே ஆண் உருவங்களின் ஓவியங்களும் மேலே மிருகமொன்றின் மீது உருவம் அமர்ந்திருப்பதைப் போன்ற ஓவியமும் கிடைத்துள்ளன.

குகையின் சுவரில் மிக உச்சியில் பாலுணர்வு ஓவியம் ஒன்றும் தீட்டப்பட்டுள்ளது. இவ்வோவியத்தில் ஆண் உருவத்தின் கால்கள் அகற்றி வைக்கப்பட்ட நிலையில் வரையப்பட்டுள்ளது. ஓவியத்தின் கோடுகள் சீராக இல்லாதிருப்பதாலும் ஓவியம் எட்டாத தொலைவில அதிக உயரத்தில் இருப்பதாலும் நீண்ட குச்சியின் உதவி கொண்டு ஓவியம் தீட்டப்பட்டிருக்கலாம் ஓவியத்தின் கோடுகள் சீராக வரையப்படாமல் அதிக கோணல்களுடன் தீட்டப்பட்டுள்ளது.

கற்கால ஓவியங்களின் காலத்தை அறுதியிட்டுக் கூறுதல் என்பது இயலாததாகும். காரணம் அவைகள் வரலாற்றிற்கு முற்பட்ட காலத்தில் மனிதனால் வரையப்பட்ட ஓவியங்களாகும் பொதுவாக, தமிழகத்தில் கிடைத்துள்ள பழங்கால ஓவியங்கள் அனைத்தும் பெருங்கற்கால ஈமச் சின்னங்கள் கிடைக்கும் பகுதியில் காணப்படுவதால் அவை பெருங்கற்காலத்தைச் சார்ந்த மனிதனால் வரையப்பட்டிருக்க வேண்டுமெனவும் அவைகள் அக்காலத்தையே சார்ந்தவை எனவும் அறிஞர்கள் கருதுகிறார்கள்[6] திருமலைக்கு அருகிலும் பெருங்கற்கால ஈமச்சின்னங்கள் கிடைத்துள்ளன. எனவே இவ்வோவியங்களும் பெருங்கற்காலத்தைச் சார்ந்தவைகளாக இருக்கலாம்

திருமலைக் குன்றின் உச்சியில் கண்டறியப்பட்டுள்ள தமிழ்பிராமி எழுத்துக்களின் காலத்தை கி.மு 2ஆம் நூற்றாண்டு எனக் கணிக்கலாம். எனவே இவ்வோவியங்கள் உறுதியாகக் கி மு. 2ஆம் நூற்றாண்டிற்கு முன்னரே தீட்டப்பட்டிருக்க வேண்டும் எனலாம். ஏனென்றால் அதற்குப் பின்னர் ஓவியங்கள் வரையப்பட்டிருந்தால் மனிதன் தனக்குத் தெரிந்த எழுத்துக்களையும் தீட்டியிருப்பான் வடஇந்தியாவில் திக்லா[7] என்ற இடத்தில் வண்ணத்தால் தீட்டப்பட்ட பிராமி எழுத்துகளுடன் கூடிய வரலாற்றுக்கால ஓவியங்கள் கிடைத்துள்ளன என்பதை இங்கு நினைவுகூர்தல் பொருந்தும்.

## பெருங்கற்கால மக்களின் படைச் சின்னங்கள்

இறந்தோர் நினைவாக பெருங்கற்களைக் கொண்டு கல்லறை எழுப்பி அதை வணங்கும் வழக்கம் தென்னிந்தியாவில் கி மு. 1000 ஆண்டுகள் முதல் வழக்கத்திலிருந்து வந்தது[8]. தொல்லியலில் இதனை 'பெருங்கற்காலம்' என அழைப்பர். இங்ஙனம் எழுப்பப்பட்ட கல்லறைகள் பெரிய கற்களைக் கொண்டு எழுப்பப்பட்டமையால் அவை 'பெருங்கல் படைச்சின்னங்கள்' அல்லது 'பெருங்கற்கால ஈமச் சின்னங்கள்' என அழைக்கப்படுகின்றன. தமிழகத்தில் கி.மு. 5ஆம் நூற்றாண்டிலிருந்து பெருங்கற்கால ஈமச் சின்னங்கள் நன்கு வளர்ச்சி பெற்று விளங்கின. சங்க இலக்கியங்களில் காணப்படும் 'பரல் உயர் பதுக்கை' (புறம் 264), 'நெடுநிலை நடுகல்' (அகம் 289), 'கற்திட்டை',

'கல்வட்டம்', 'கற்பதுக்கை' போன்ற பெருங்கற்கால ஈமச் சின்னங்கள் பல்வேறு அமைப்புகளைச் சுட்டும். இச்சொற்கள் சங்க காலத்தில் பெருங்கல் படைச் சின்னங்கள் வழக்கிலிருந்தமையைத் தெளிவுபடுத்து-கின்றன[9]. பெருங்கற்கால மக்கள் சங்க காலத்தைச் சார்ந்-தவர்கள் ஆவார்கள். தமிழகத்தில் முதலில் இரும்பின் பயனைக் கண்டுபிடித்துப் பயன்படுத்திய மக்களும் இவர்-களேயாவர். எனவே இக்காலம் இரும்புக்காலம் என்றொரு பெயரிலும் அழைக்கப்படுகிறது. இந்தபெருங்கற்காலத்தின் காலவரம்பு ஏறக்குறைய கி.மு. 1000 முதல் கி.பி. 500 வரை எனக் கொள்ளலாம்[10]. கர்நாடகத்திலுள்ள பிரம்ம கிரியில் நடந்த அகழ்வாய்வை அடிப்படையாகக் கொண்டு மார்டிமர் வீலர் அங்கு கிடைத்த பெருங்கற்கால ஈமச்சின்னத்திற்கும், தென்னகத்திலுள்ள ஏனைய-வற்றிக்கும் கி.மு 3ஆம் நூற்றாண்டைக் காலமாக கூறுகிறார்[11].

சவக்குழிகளின் அமைப்புக்கு ஏற்றவாறு பெருங்கற்-கால ஈமச்சின்னங்கள் பலவகையாகப் பிரிக்கப்பட்டுள்ளன. அவற்றுள் 1) கல்வட்டம் (cairn-circle) 2. கல்லறை (Dolmenoid cist) 3. குடைக்கல் (Umbrella stone . தொப்பிக்கல் (Topikkal) 5. குடைவரைக்குகை (Rock cut-cave) 6. குத்துக்கல் (Menhir) 7. நடுகல் (Hero-stone) 8. ஈமத்தாழி (Urn) ஆகியவை குறிப்பிடத் தக்கவையாகும்[12].

திருமலைக்கு அருகாமையில் பெருங்கற்கால ஈமச்-சின்னகள் கண்டறியப்பட்டுள்ளன. திருமலைக்கு வட-கிழக்கில் சற்று தொலைவில் அமைந்துள்ள நாமனி

கண்மாயின் (நாபனூர் கண்மாய்) வடக்குக்கரைச் சரிவில் ஏறக்குறைய மூன்று ஏக்கர் நிலத்தில் ஐம்பதிற்கும் மேற்பட்ட பெருங்கற்காலக் கல்வட்டங்கள் கள ஆய்வின்போது கண்டுபிடிக்கப்பட்டுள்ளன சவக்குழியின் மேற்பகுதி அடைக்கப்பட்டுச் சிறியதும், பெரியதுமான பாறைகளால் அமைக்கப்பட்ட ஒரு வட்டமான அமைப்பே கல்வட்டமாகும். சவக்குழியினுள் ஒன்றுஅல்லது அதற்கு மேற்பட்ட தாழிகள் புதைக்கப்பட்டிருக்கின்றன முதுமக்கள் தாழிகள் புதைக்கப்பட்ட இடத்தினைச் சுற்றி காணப்படும் வட்ட வடிவமான கல் அமைப்பே கல்வட்டமாகும். சிலவற்றில் தாழியைச் சுற்றி கல்வட்டம் இல்லாமலும் இருக்கின்றன. இப்பகுதி மக்கள் இப்பெருங்கற்கால ஈமச்சின்னத்தை 'மதமதக்கசாலை' என்று அழைக்கின்றனர். முதுமக்கள் தாழி என்பதின் திரிபே மதமதக்க சாலையாகும்.

சங்ககாலத்தில் இறந்தோரை தாழியிலிட்டு புதைக்கும் வழக்கத்தைச் சுட்டும் குறிப்புகள் நற்றிணை 27:11-12 புறநானூறு 238:1 5:364:1-4, பதிற்றுப்பத்து 44:22-23 போன்ற சங்க இலக்கியங்களில் இருப்பதைக் காணலாம்[13]. மணிமேகலையில் இறந்தவர்களை அடக்கம் செய்ய மக்கள் பின்பற்றிய முறைகளைக் காட்டும் குறிப்புகள் காணப்படுகின்றன.

> ''சுடுவோர் — இடுவோர் — தொடுகுழிப்படுப்போர்
> தாழ்வாயினடைப்போர் — தாழியிற் கவிப்போர்[14]''
> மணிமேகலை 6,11,66—67.

இறந்த ஒருவரின் உடல் உடனேயே குழியில் புதைக்கப்படவில்லை. இறந்த சிறிது காலத்திற்குப் பிறகு, அவரது மண்டை ஓடு, எலும்புக் கூட்டினைத் திரட்டி இக்குழியில் அடக்கம் செய்திருக்கிறார்கள். எனவே இச்சவக்குழிகள்

இறந்தவர்களுக்குச் செய்யப்பட்ட இரண்டாவது சவ அடக்க நிலையை உணர்த்துகின்றன. தாழிகளினுள் காணப்படும் எலும்புகளுக்கும், இவ்விளக்கத்தினைத்தான் கொடுக்க முடியும். ஏனெனில் சிறிய தாழியினுள் ஓர் உடலை அப்படியே நுழைப்பது என்பது இயலாத செய-லாகும். ஆனால் குழந்தைகளின் சடலங்களைத் தாழியினுள் நுழைப்பது இயலும். எனினும் இம்முறையில் புரியாத சில சிக்கலான கருத்துக்கள் மறைந்து கிடக்கின்றன[15].

திருமலையில் காணப்படுகின்ற பெருங்கற்கால தாழி-யுடன் கூடிய கல்வட்டத்தின் காலத்தை கி.மு. 5ஆம் நூற்றாண்டு முதல் கி.மு. 3ஆம் நூற்றாண்டு வரைக் கொள்ளலாம் இம்மக்களே திருமலைக்குன்றின் உச்சியில் கிடைத்துள்ள ஓவியங்களைதீட்டியிருக்கலாம். தமிழகத்தில் கிடைத்துள்ள குகை மற்றும் பாறை ஓவியங்கள் பெருங்-கற்கால ஈமச்சின்னங்களுக்கு அருகாமையில் காணப்படு-வதாலும்[16] தர்மபுரி மாவட்டத்தில் ஓவியத்துடன் கூடிய பெருங்கற் படைச் சின்னங்களாகிய கல்திட்டைகள் பத்துக்கு மேல் கண்டுபிடிக்கப்பட்டிருப்பதாலும்[17] திருமலை ஓவியங்களை பெருங்கற்காலத்தைச் சார்ந்த-தென கூறலாம்.

பெருங்கற்கால இடுகாடுகளில் கிடைக்கும் கறுப்பு-சிவப்பு நிறபானை ஓடுகள், கறுப்பு நிற பானை ஓடுகள், சிவப்பு நிற பானை ஓடுகள் மற்றும் தாழியின் தடித்த விளிம்புப் பகுதிகள் போன்றவை திருமலைக்கு அருகாமை-யிலுள்ள பெருங்கற்கால இடுகாட்டிலும் கிடைத்துள்ளன.

**சமணக் கற்படுகைகளும் தமிழ்பிராமிக் கல்வெட்டுக்களும்**

தமிழகத்தில் கி. மு. 3 ஆம் நூற்றாண்டிலிருந்து சமண சமயம் வளரத் தொடங்கியது. சமண சமயத்தைப் பரப்புவதற்காக அச்சமயத் துறவிகள் பண்டைய தமிழ-

கத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்து செயல்பட்டுவந்தனர். அவ்வாறு மதத்தைப்பரப்ப விழைந்த துறவிகள் உறைவதற்கென்று மலைக்குன்றுகளின் குகைகளில் மன்னர்களும் வணிகர்களும்,மக்களும் கற்படுக்கைகளைவெட்டிக்கொடுத்துள்ளதை மாங்குளம் சித்தன்னவாசல், புகழூர் போன்ற இடங்களிலுள்ள தமிழ்பிராமிக் கல்வெட்டுக்களின் வாயிலாக அறிகிறோம். இவ்வகையான கல்படுக்கைகளும் அவற்றைக் குறிக்கும் தமிழ்பிராமிக் கல்வெட்டுக்களும் மிகுதியான அளவில் தமிழகத்தில் மதுரை மாவட்டத்தில் அரிட்டாபட்டி (மாங்குளம்), கருங்காலக்குடி, கீழவளவு விக்கிரமங்கலம், அழகர்மலை, ஆனைமலை, திருப்பரங்குன்றம், வரிச்சியூர் போன்ற இடங்களிலும், பசும்பொன் முத்துராமலிங்கம் மாவட்டத்தில் குன்றக்குடியிலும் திருச்சி மாவட்டத்தில் புகழூரிலும், புதுக்கோட்டை மாவட்டத்தில் சித்தன்னவாசலிலும் கிடைத்துள்ளன. இவ்வகையான கல்படுக்கைகளுடன் கூடிய தமிழ்பிராமிக் கல்வெட்டுக்களின் காலத்தை கி. மு. 3 ஆம் நூற்றாண்டு முதல் கி. பி 4ம் நூற்றாண்டு வரை எனக்கொள்ளலாம்[18]

பண்டைக்காலத்தில் சமண சமயத்துறவிகள் தங்கிச் சென்ற இடங்களில் ஒன்றாகத் திருமலை திகழ்ந்தது. திருமலைக்குன்றின் உச்சியிலுள்ளபம்பரமலைக்கு மேற்குப் பகுதியில் இயற்கையாக அமைந்துள்ள இரு குகைத்தளங்களில் காணப்படுகின்றகல்படுக்கைகளும் குகைகளின் நெற்றியில் வெட்டப்பட்டுள்ள தமிழ்பிராமிக் கல்வெட்டுக்களும் அதற்குச் சான்றாக விளங்குகின்றன. திருமலையில் கண்டறியப்பட்டுள்ள இத்தொல்லியல்சான்றுகள் இன்னும் சரிவர வெளியிடப்படவில்லை. கீழ்புறமுள்ள குகைத்தளத்தின் நெற்றியில் பதினேழு எழுத்துக்களைக் கொண்ட தமிழ்பிராமிக் கல்வெட்டுக் காணப்படுகிறது. கல்வெட்டு வாசகம் பின்வருமாறு அமைந்துள்ளது.



'எக்காடுஊர் காவிதிகன் கொறிய
பாவிய'

'எக்காட்டூரைச் சார்ந்த காவிதிகன் இக்குகைத்-தளத்துப் படுக்கையை உருவாக்கினான்' என்பது இக்கல்வெட்டின் பொருளாகும். மேற்புறமுள்ள குகைத்தளத்தில் பொறிக்கப்பட்டுள்ள இக் கல்வெட்டில் முற்பகுதியும் பிற்பகுதியும் அழிந்துவிட்டன கிடைத்துள்ள எழுத்துக்களை



வகாரண்டை எனப் படிக்கலாம்.

முதல் கல்வெட்டில் காணப்படும் 'எக்காடூர்' என்ற சொல் திருப்பரங்குன்றம், பிள்ளையார்பட்டி முதலிய இடங்களிலும் கிடைத்த பழங்கல்வெட்டுக்களிலும் காணப் படுகிறது. பிள்ளையார்பட்டிக் கல்வெட்டில் குறிப்பிடப் பெறும் எக்காட்டூர் அவ்வூரைச் சார்ந்த பெருந்தச்சனைக் குறிப்பிடுகிறது. திருப்பரங்குன்றக் கல்வெட்டில் எக்காட்டூரைச் சார்ந்த 'ஈழக்குடும்பிகன்' குறிப்பிடப்பட்டுள்ளான். இதனால் எக்காட்டூர் என்ற ஊர் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த ஊராக விளங்கியிருந்திருக்கிறது என்பதை அறிய முடிகின்றது[19]. 'காவிதி' என்றபட்டம் சில வேளாளர்களுக்கும் பெரிய தனக்காரர்களுக்கும் சங்ககாலத்தில் பாண்டிய மன்னர்-களால் வழங்கப்பட்டதாகும். (தொல்காப்பியம், பொருள் : 30 உரை)[20]

திருமலையில் கிடைத்துள்ள தமிழ்பிராமி எழுத்துக்களின் இயல்பினை ஆழ்ந்து ஆய்வோமானால் அவை கி. பி. 2 ஆம் நூற்றாண்டைச் சார்ந்தவை எனக்கொள்ளலாம். குறிப்பாக இரண்டு இடங்களில் வருகின்ற


ய) என்ற பிராமி எழுத்து கி. பி. 2 ஆம் நூற்றாண்டை சார்ந்த


(ய)ஒத்துள்ளதை அறியலாம். மேலும் திருமலையில் காணப்படுகின்ற

(எ) சித்தன்னவாசல்





(எ) யினை ஒத்துள்ளது. சித்தன்னவாசல் தமிழ்பிராமிக் கல்வெட்டினை கி.பி. 2 ஆம் நூற்றாண்டைச் சார்ந்தது எனக் கல்வெட்டு அறிஞர் டி. வி. மகாலிங்கம் கூறுகிறார்[21] மேலும் 'காவிதி' என்ற சொல் திருமலை மற்றும் சித்தன்னவாசல் தமிழ்பிராமிக் கல்வெட்டுக்களில் காணப்படுகின்றமையால் இரண்டும் சமகாலத்தைச் சார்ந்தவை எனக் கொள்ளமுடியும். திருமலையில் காணப்படும்.


(டு) என்ற பிராமி எழுத்து மாங்குளத்திலுள்ள தமிழ்

பிராமிக் கல்வெட்டில் காணப்படுகின்ற. 'டு' வை ஒத்திருக்கிறது. மாங்குளத்திலுள்ள தமிழ்பிராமிக் கல்வெட்டின் காலம் கி. பி 3 ஆம் நூற்றாண்டு என டி. வி மகாலிங்கம் கூறுகிறார்[22] எனவே திருமலையிலுள்ள சமணப் படுக்கைகளும் தமிழ்பிராமிக் கல்வெட்டுக்களும் கி. பி. 2 ஆம் நூற்றாண்டைச் சார்ந்தவையாகும்.

## 2. குடைவரைக் கோயில்

பல்லவர்களுக்கு முற்பட்ட காலங்களில் தமிழகத்துக் கோயில்கள மரத்தாலும் மண்ணாலும், செங்கற்களாலுமே கட்டப்பட்டன. அவை நாளடைவில் அழிந்து விட்டன பல்லவர்கள் (575 900 கி.பி) தாம் குகைக் கோயில்களையும் மலைக்கோயில்களையும் கற்கோயில்களையும் அமைத்து அழியாப் புகழ் பெற்றனர். கோயில் அமைப்பதில் தமிழ்நாட்டில் முன்பு இல்லாத புதிய முறையை மகேந்திரவர்மன் (610-630கி.பி) முதன் முதலாக உண்டாக்கினான். அஃதென்னவென்றால் ஒரே கருங்கற்

பாறையைக் குடைந்து, மண்டபத்தையும், கருவறையையும் அமைக்கின்ற புதிய முறையை இந்த அரசன் புதியன புகுதலாக அமைத்தான். இவ்வாறு பாறைகளில் அமைக்கப்பட்ட கோயில்களுக்குக் 'குகைக் கோயில்கள்' அல்லது 'குடைவரைக் கோயில்கள்' என்பது பெயர்.

இப்போது தமிழ்நாட்டில் ஏறக்குறைய ஐம்பதுக்கு மேற்பட்ட குகைக்கோயில்கள் உள்ளன. பல்லவர்களைப் பின்பற்றி முற்காலப் பாண்டியர்களும் (590-995 கி பி) குகைக் கோயில்களை அமைத்தனர். இவர்களின் குடைவரைக் கோயில்கள் மலையடிக்குறிச்சி, ஆனைமலை, திருப்பரங்குன்றம், திருமலைபுரம், சேந்தமரம், சொக்கம் பட்டி, குன்றக்குடி, பிள்ளையார்பட்டி, திருமலை, பிரான்மலை, திருக்கோலக்குடி, திருமயம், திருச்செந்தூர் போன்ற இடங்களில் காணப்படுகின்றன. பாண்டியர்களின் குகைகள் மகேந்திரனது குகைகளைப் போல் எளிமையானவை 1) தூண்களின் மேலும் கீழும் சதுரங்களும் இடையே எட்டுப்பட்டையும் உண்டு 2) போதிகை அதிக வேலைப்பாடின்றி மேல் நோக்கி வளைந்திருக்கும். பல இடங்களில் அலை போன்ற மடிப்புக்களைக் கொண்ட தரங்க போதிகையும் காணப்படுகின்றன 3) தூணின் சதுரபாகங்களில் தாமரை இதழ் வேலைப்பாட்டையும் காணலாம்.[23]

பெரும்பாலான முற்காலப் பாண்டியர்களின் குகைக் கோயில்களில் கல்வெட்டுகள் காணப்படாததால் அவைகளின் காலத்தை அறுதியிட்டு கூறுதல் என்பது இயலாத தாகும். இருப்பினும் குகையின் அமைப்பு, அவற்றில் காணப்படுகின்ற சிற்பங்களின் இயல்பினைக் கொண்டு குகை குடையப்பட்ட காலத்தைக்கணிக்கலாம். திருமலைக் குடைவரைக் கோயிலிலும் அதனின் சமகாலத்துக் கல்வெட்டு எதுவுமில்லை, சிற்பங்களின் இயல்பினைக்

கொண்டு இச்குகைக் கோயில் கி.பி. 8 ஆம் நூற்றாண்டில் குடையப்பட்டது எனலாம். குறிப்பாக முருகனின் முப்புரிநூல் மற்றும் அவன் அணிந்துள்ள கேயூரத்தில் அமைக்கப்பட்டுள்ள மலர்வேலைப்பாடுகள் குடைவரைக் கோயிலின் காலத்தைக் கணிக்க உதவுகின்றன. இக்குடைவரைக் கோயிலிலும் மலைக்கொழுந்தீஸ்வரர் கற்றளிலும் காணப்படுகின்ற 13 ஆம் நூற்றாண்டைச் சார்ந்த கல்வெட்டுகள்[24], கருவறையில் காணப்படுகின்ற இறைவனை, 'குன்றத்தூர் நாயனார்' என்றழைக்கின்றன

## தரை அமைப்பு

திருமலைக் குடைவரைக் கோயில் மலையின் வடக்குச் சரிவில் குடையப்பட்டுள்ளது. இக்குடைவரைக் கோயில் ஏனைய முற்காலப் பாண்டியர்களின் குடைவரைக் கோயிலைப் போன்றே கருவறை, அர்த்தமண்டபம் முதலிய அமைப்புகளைக் கொண்டுள்ளது கோயிலின் இன்றைய நுழைவாயில் வடக்குப்பக்கத்தில் அமைந்துள்ளது. குடைவரைக் கோயிலின் பழைய நுழைவாயிற்குரிய படிகள் அர்த்தமண்டபத்தின் கீழே மூடப்பட்ட பாதாளத்தில் காணப்படுகின்றன. கோயில் குடையப்பட்ட காலத்தில் அர்த்த மண்டபத்தின் வடக்குப்பகுதி முழுவதும் திறந்தே இருந்திருக்க வேண்டும். பிற்காலத்தில் அப்பகுதி கட்டுமானச் சுவரினால் மூடப்பட்டுள்ளது.

கருவறை உயர்ந்த அதிட்டானத்தின் மீது கிழக்குத் திசையை நோக்கியவாறு குடையப்பட்டுள்ளது கருவறை ஏறத்தாழ சதுரவடிவில் அமைக்கப்பட்டுள்ளது. கருவறையின் நீளம் 1 மீட்டராகவும், அகலம் 1.26 மீட்டரிலிருந்து 1.40 மீட்டராகவும் அமைந்துள்ளது. கருவறையின் பின்சுவரில் உமாசஹிதமூர்த்தியின் எழிலார்ந்த சிற்பம் செதுக்கப்பட்டுள்ளது. கருவறையின் முன் சுவரிலும்

பக்கச்சுவரிலும் குறுகிய தூண்களுக்கிடையே ஆழமாக வெட்டப்படாத மாடக்குழிகள் அமைக்கப்பட்டுள்ளன. இவற்றில், முன் சுவரிலுள்ள குழிகளில் இடப்புறம் குறளனும் வலப்புறம் குறளியும் புடைப்புச் சிற்பமாக வெட்டப்பட்டுள்ளனர்.

கருவறையை ஒட்டி, கருவறையையும் அர்த்தமண்டபத்தையும் இணைக்கும் அந்தராளம் என்ற குறுகியபாதை காணப்படுகிறது. அந்தராளம் 92 சென்டிமீட்டர் அகலமுடையதாக அமைக்கப்பட்டுள்ளது. அந்தராளத்தையொட்டி 3.17 மீட்டர் நீளத்திலும் 1.60 மீட்டர் அகலத்திலும் இருபடிகளுடன் கூடிய உயர்ந்த மேடையொன்று அர்த்தமண்டபத்தில் காணப்படுகிறது. இம்மேடையின் தென்மேற்குப் பகுதியில் பிற்காலத்தில் செதுக்கி வைக்கப்பட்ட பிள்ளையார் வீற்றிருக்கிறார். கற்களைக் கொண்டு பிற்காலத்தில் உயரமாகக் கட்டப்பட்ட இம்மேடை, குடைவரைக் கோயிலை அமைக்கும் போது அர்த்தமண்டபத்திலிருந்து கருவறைக்குச் செல்ல அமைக்கப்பட்ட படிகளைக் கீழே மறைத்துள்ளது.

அர்த்த மண்டபம் ஏறக்குறைய சதுரவடிவில் அமைக்கப்பட்டுள்ளது. குடைவரைக் கோயிலின் நுழைவாயில் அர்த்தமண்டபத்தின் வடகிழக்கு மூலையில் அமைந்துள்ளது. 5 03 மீட்டர் முதல் 5.93 மீட்டர் வரை நீளமும் 5.65 மீட்டர் அகலமும் கொண்ட அர்த்தமண்டபத்தின் வடக்குப் பகுதியில் இரண்டு உயர்ந்த, கனத்த தூண்களும் இரண்டு அரைத்தூண்களும் ஒரே வரிசையில் அழகுற அணிவகுக்கின்றன. அர்த்தமண்டபத்தின் தென்சுவரில் குடையப்பட்டுள்ள சதுரவடிவ குழியில் முருகனின் சிற்பத் தொகுதி அமைக்கப்பட்டுள்ளது.

அர்த்த மண்டபத்திலுள்ள தூண்கள் ஏறத்தாழ 2 மீட்டர் உயரமுடையதாகவும் அதன் மேலே செதுக்கப்

பட்டுள்ள போதிகை 30 சென்டிமீட்டர் நீளமுடைய தாகவும் வெட்டப்பட்டுள்ளன. தூண்களில் சதுரம், கட்டு போன்ற வித்தியாசமான அமைப்புகள் எதுவும் உருவாக்சப்படாமல் அவைகள் முழுவதும் சதுரமாக வெட்டப்-பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கதாகும். தூண்களின் தென்பக்கத்தைத் தவிர ஏனையவற்றில் வேல்வடிவ வேலைப்பாடுகளும் அவற்றின் மேலே தொடர்மாலை வேலைப்பாடுகளும் காண்போர் கண்ணைக்கவரும் வகையில் செதுக்கப்பட்டுள்ளன. தடித்த தூண்களின் மீது அமைக்கப்பட்டுள்ள அகலமான போதிகைகள் குடைவரையின் விதானத்தைக் (கூரையை) கம்பீரமாகத் தாங்கியுள்ளன. போதிகைகளின் பக்கவாட்டில் எட்டுத் தரங்க வடிவ வளைவுகள் செதுக்கப்பட்டுள்ளன. தரங்கவடிவ வேலைப்பாட்டிற்கு நடுவே தட்டையான பட்டை (Patta) என்ற அமைப்பு செதுக்கப்பட்டுள்ளது.

அர்த்த மண்டபத்தின் வடக்குச்சுவரில் சதுரவடிவத் துளைகளைக் கொண்ட கல் ஜன்னல் வெளிச்சத்திற்காக அமைக்கப்பட்டுள்ளது. (ஆனால் மிகுதியான வௌவால்களின் நடமாட்டத்தால் தற்சமயம் ஜன்னலின் வெளிப்புறம் சாந்தினால் அடைக்கப்பட்டுள்ளது.) சுமார் 78 சென்டிமீட்டர் அகலமுடைய குடைவரைக் கோயிலின் நுழைவாயில் உயரத்தில் இருப்பதனால் அதை எளிதாக வந்தடைய பிற்காலத்தில் படிக்கட்டுகள் அமைக்கப்பட்டுள்ளன இப்படிக்கட்டுகள் மலைக்கொழுந்தீஸ்வரர் திருக்கோயிலின் முகமண்டபத்தின் தென்திசையில் அமைந்துள்ளன.

## சிற்பங்கள்

திருமலைக் குடைவரைக் கோயிலிலும் மிகுதியான சிற்பங்கள் காணப்படவில்லை என்றாலும் அங்குள்ள உமாசஹிதமூர்த்திமற்றும் முருகனின் புடைப்புச்சிற்பங்கள் வனப்புடன் வடிக்கப்பட்டுள்ளன. மிகவும் கடினமான

பாறைகளின் இறையுருவங்களைச் செதுக்குவதில் பல்லவர்களும் முற்காலப் பாண்டியர்களும் தமிழகத்தில் முன்னோடிகளாக இருந்தமையை வரலாறு இயம்பும். பல்லவர்களோடு முற்காலப் பாண்டியர்கள் கொண்டிருந்த அரசியல் மற்றும் திருமணத் தொடர்பின் காரணமாகப் பாண்டியர்கள் கலை மற்றும் சட்டிடக்கலையில் பல்லவர்களின் தாக்கம் இருப்பதை நம்மால் எளிதாகக் காண முடியும். திருமலைக் குடைவரைக் கோயிலிலுள்ள சிற்பங்களும் இதற்கு விதிவிலக்கல்ல.

## உமாசஹிதமூர்த்தி:

குடைவரைக் கோயிலின் கருவறையின் பின்பக்கச் சுவரில் எழில்பொங்கும் உமாசஹிதமூர்த்தி (ஒரே இருக்கையில் சிவனும் உமையும் அருகருகே அமர்ந்த நிலை) புடைப்புச் சிற்பமாக உருவாக்கப்பட்டுள்ளார். மரபின்படி சுகாசனத்தில் (ஒரு கால் இருக்கையின் மீது படிந்து இருக்க மற்றொருகால் தொங்கிய நிலையில்) அமைக்கப் படவேண்டிய சிவன் மட்டுமல்லாது இங்கே உமையும் உத்குடி ஆசனத்தில் (ஒரு கால் இருக்கையின் மீது குத்திட்டு இருக்க மற்றொரு கால்தொங்கிய நிலையில்) அமைக்கப்பட்டுள்ளாள், அப்பனும் அம்மையும் அழகுற அமர்ந்துள்ள இந்த அரிய காட்சி காணக் கிடைக்காததாகும். சிவன் நன்கு அலங்கரிக்கப் பட்ட மகுடத்தைத் தலையிலும், மகரகுண்டலங்களைக் காதுகளிலும், ஹாரத்தைக் கழுத்திலும், மாலையைத் தோள்களிலும், உதரபந்தத்தை இடுப்பிலும், மோதிரங்களை விரல்களிலும், கேயூரங்களைப் புஜங்களிலும், கங்கணங்களை மணிக்கட்டுகளிலும், சிலம்புகளைக் கால்களிலும், பாதஜலகங்களைத் தன் பாதத்திலும் அணிந்துள்ளார். சிவன் கீழ் ஆடை மட்டுமே அணிந்துள்ளார். கீழ் ஆடையின் மீது கட்டப்படும் மேகலையின்

நுனிப்பகுதி இரு கால்களுக்கிடையே தொங்கிய நிலையில் காணப்படுகிறது. இருகரங்களைத் தாங்கியவாறு அமைக்கப்பட்டுள்ள சிவனின் வலக்கரம் ஊருஹஸ்தத்திலும் இடக்கரம் தனக்கு இடப்பக்கத்தில் அமர்ந்துள்ள உமையின் வலதுகரத்தைப் பற்றியுள்ளது. சிவனைப் போன்றே உமையும் பல்வேறு அணிகலன்களை அணிந்துள்ளாள். அவளுடைய கொங்கைகளின் மீது மார்புக்கச்சை உருவாச்சப்படவில்லை. உமையின் இருகரங்களில் இடக்கரம் இருக்கையின் மீது படிந்தும் வலக்கரம் அண்ணலின் இடக்கரத்தைப் பற்றியும் உள்ளன. சிவனின் நுனிநாசியும் உமையின் கொங்கையும் சிதைந்துள்ளன.

தவறுதலாக மக்கள் இச்சிற்பகாட்சியைக் கல்யாண சுந்தரமூர்த்தி என்று அழைக்கின்றனர். ஆனால் ஆகமநெறிப்படிக் கல்யாண சுந்தரமூர்த்தி வடிவில், சிவனும் உமையும் கல்யாணவடிவில் நின்ற கோலத்தில் இருக்க வேண்டும். மலைமகளுக்குப் பின்னால் அலைமகளும் பூமகளும் இருக்க, சிவனுக்கு அருகில் திருமால் நின்ற நிலையில் சிவனின் வலதுகரத்தின்மீது தாரைவார்த்துத் தன் தங்கை உமையைத் திருமணம் செய்து தருவதைப் போல் அமைக்கப்பட வேண்டும். பிரம்மா ஓமவேள்வி முன்பு அமர்ந்திருக்க வேண்டும். ஆனால் இங்கோ சிவனும் உமையும் உட்கார்ந்த நிலையில் காணப்படுவதால் இது கல்யாண வடிவன்று. சிவனும் உமையும் அருகருகே அமர்ந்துள்ள இந்த வடிவம் திருமணத்திற்குச் சற்றுப் பின்னர் இருவரும் பகடைவிளையாடுவதற்கு அமர்ந்துள்ள நிலையை நினைவுபடுத்துகின்றது எனலாம். பகடை விளையாட்டு நிகழ்ச்சி சிவபுராணங்களில் குறிப்பிடப் பட்டுள்ளதை இங்கு கூறுவது நன்றே. இதைப் போன்றே உமாசஹிதமூர்த்தியின் சிற்பமொன்று திருமலைக் குடைவரைக் கோயிலுக்குச் சமகாலத்துப் பிரான்மலைக் குடைவரைக் கோயிலும் காணப்படுகிறது.

## முருகன்

குடைவரைக் கோயிலின் அர்த்தமண்டபத்தின் தென்சுவரில் முருகனின் அழகிய புடைப்புச் சிற்பம் காணப்படுகிறது. முருகன தன்னுடைய வலப்புறமாகச் சற்றுச் சாய்ந்து 'துவிபங்க' நிலையில் காட்சியளிக்கிறான். குமரன் கரந்த மகுடத்தைத் தலையிலும், குண்டலங்களைக் காதுகளிலும், ஹாரத்தைக் கழுத்திலும், முப்புரிநூலை மார்பிலும், கடிபந்தத்தை இடுப்பிலும், கேயூரங்களைப் புஜங்களிலும், கங்கணங்களை மணிக்கட்டுகளிலும் எழில் பாங்குடன் அணிந்துள்ளான். வள்ளி மணாளனின் தின்மையான முப்புரிநூல் குறுக்காக, வலதுபக்கக்கையின் மேலாகச் செல்கிறது. இந்த அம்சத்தினைப் பல்லவ மற்றும் முற்-காலப் பாண்டியர்களின் சிற்பங்களில் மட்டுமே காண-முடியும். முருகன் கீழ் ஆடை மட்டுமே அணிந்துள்ளான். ஆடையின் மீது கட்டப்பட்டிருக்கும் மேகலையின் நுனிப்-பகுதி அவனுடைய வலப்பக்கமாகத் தொங்கிச் சிற்பத்-தொகுதியின் தரையில் படிந்துள்ளது. முருகனின் இரு-கரங்களில் வலதுகரம் ஊருஹஸ்தத்திலும் இடதுகரம் கடிய வலம்பித ஹஸ்தத்திலும் உள்ளது.

பானை போன்ற வயிற்று அமைப்பினையுடைய குறளன் ஒருவன் குமரனுக்கு வலப்பக்கத்தில் செதுக்கப்-பட்டுள்ளான். அவன் இறைவனை நோக்கிப் பின்புறமாகத் திருப்பியுள்ளான். குறளன் முருகனின் தலைக்கு மேலே நீண்ட குடையைக்குறுக்காகப்பிடித்துள்ளான். அவனுக்குப் பின்புறம் கொடிமரத்தொன்றின் மீது சேவல் நின்றவாறு செதுக்கப்பட்டுள்ளது. முருகனுக்கு இடப்பக்கம் பணிவுடன் கைகளைக் கட்டியவாறு நின்ற நிலையில் காணப்படும் சிறிய ஆண் உருவம் துறவியாக இருக்கலாம். துறவியின் நீண்ட தலைமுடி கொண்டை வடிவில் தலையின் மேல் காணப்படுகிறது. துறவி அணிந்துள்ள மேகலையின் நுனிப்

பகுதி அவனுக்கு இடப்புறமாகத் தொங்கிய நிலையில் காணப்படுகிறது. சிற்பத்தொகுதியின் கீழே இடப்புறம் ஆடும், வலப்புறம் மயிலும் எதிரெதிரே செதுக்கப்பட்டுள்ளன. மிருகங்களுக்கிடையே அழகுடன் செதுக்கப்பட்ட பூக்கள் நிரம்பிய கலசம் ஒன்றும் காணப்படுகிறது.

## குறளனும் குறளியும்

கருவறையின் முன்சுவரில் துவாரபாலர்களை அமைப்பதே மரபாகும். ஆனால் வழக்கத்திற்கு மாறாகத் திருமலைக் குடைவரைக் கோயிலில், கருவறையின் முன்சுவரில் குறளனும் குறளியும் அமைக்கப்பட்டிருக்கின்றனர். பானை போன்ற வயிற்றமைப்பினையுடைய இவர்கள் புடைப்புச் சிற்பமாகச் செதுக்கப்பட்டுள்ளனர். இடப்பக்கச் சுவரிலுள்ள குறளன் தன்னுடைய இடக்கையில் விளக்கைப் பிடித்தும் வலக்கையால் சுடர் அணையாவண்ணம் விளக்கைக் காத்தும் நிற்கிறான். குறளன் தலைப்பாகை மற்றும் பிற அணிகலன்களை அழகுற அணிந்துள்ளான், அவனுடைய பிதுங்கிய கண்கள் குறளியினுடையனதைப் போன்றே அமைக்கப்பட்டுள்ளன. குறளி, குறளனைவிட குறைந்த அணிகலன்களையே அணிந்துள்ளாள். குறளியின் தலை அழகுற வகுடெடுத்துச் சீவப்பட்டிருக்கிறது. மேலும் அவளுடைய தலையின் பின்புறமுள்ள பருத்த அமைப்பு கொண்டை போல் தென்படுகிறது. குறளனும் குறளியும் முன்னோக்கியவாறு அமைக்கப்படாமல். கருவறையின் நுழைவாயிலைப் பார்த்தவாறு, பக்கவாட்டில் செதுக்கப்பட்டுள்ளனர்.

குடைவரைக் கோயிலின் புடைப்புச் சிற்பங்கள் அனைத்தும் சாந்தாகாரம் கொண்டு திண்மையாகப் பூசப்பட்டுள்ளதால் உள்ளே மறைந்துள்ள சிற்பங்களின் உண்மையான இயல்புகளைக் கண்டறிவதென்பது கடின-

மாக உள்ளது. சில சமயங்களில் சாந்தாகாரத்தினால் சிற்பத்தின் மேலே அழகுவேலைப்பாடுகளும் அணிகலன்களும் உருவாக்கப்பட்டுள்ளன. ஆனால், அவ்வகையான வேலைப்பாடுகளும் அணிகலன்களும் சிற்பங்களில் செதுக்கப்படவில்லை என்பதே உண்மையாகும். சில சமயங்களில் சிற்பங்களில் செய்யப்பட்ட அழகுவேலைப்பாடுகள் மற்றும் அணிகலன்கள் சாந்தாகாரம் கொண்டு சாதாரணமாக மறைக்கப்பட்டிருக்கின்றன. சில சமயங்களில் சிற்பங்களில் செதுக்கப்பட்டுள்ள அழகு வேலைப்பாடுகளும் அணிகலன்களும் சாந்தாகாரம் கொண்டு வேறு விதமாகக் காட்டப்பட்டுள்ளன.

## பொதுக் கருத்துக்கள்

தொண்டை மண்டலத்தை ஆண்ட பல்லவப்பேரரசர்கள் குடைவரை, ஒற்றைக்கற்கோயில், திறந்தவெளிப் பாறைச் சிற்பங்கள் முதலியவற்றை உருவாக்கியுள்ளமை போன்று, பாண்டிய மண்டலத்தில் முற்காலப் பாண்டிய மன்னர்களும் குடைவரை, ஒற்றைக்கோயில், திறந்த வெளிப்பாறைச் சிற்பங்கள் ஆகியவற்றை உருவாக்கியுள்ளனர். இவற்றிலுள்ள சிற்பங்கள் பெரும்பாலும் பல்லவர் காலச் சிற்பங்களை ஒத்தவையாகக் காணப்படுகின்றன. நீண்ட உடலமைப்பு. பரந்த தட்டையான மார்பு. கூம்பு வடிவமான மகுடம், அமைதியான முகச்சாயல் முதலியன பல்லவ, முற்காலப் பாண்டியர், காலச் சிற்பங்களில் இடம்பெறும் பொதுத் தன்மையாகும். மேலும் இச்சிற்பங்களிலுள்ள ஆடை, அலங்காரங்களில் சிறிது வேறுபாடு காணப்படினும் பூணூல், உதரபந்தம், அரைச்கச்சு, சன்னவீரம் போன்றவை பல்லவர் காலச் சிற்பங்களிலுள்ளவை போன்றுள்ளதைக் காணலாம். தடித்த குண்டலங்கள், அதிக வேலைப்பாடுகள் இல்லாத கேயூரங்கள், வலது பக்க கையின் மேலாகச் செல்லும் தின்மையான முப்புரிநூல் போன்ற இயல்புகள் பல்லவ மற்றும் முற்காலப்பாண்டியர்களின் சிற்பங்களில் மட்டுமே அமைந்துள்ளன.[25]

—O—

# 3. மலைக்கொழுந்தீஸ்வரர், பாகம்பிரியாள் கற்றளிகள்

கி.பி. 1020ல் சோழமன்னன் முதலாம் இராஜேந்திரன் பாண்டியப் பேரரசு முழுமையையும் கைப்பற்றி சோழ நிர்வாகத்தின் கீழ் கொண்டு வந்தான். கி.பி 1020 முதல் 1190 வரை (ஏறக்குறைய இரண்டு நூற்றாண்டுகள்) சோழ இளவரசர்களே பாண்டிய மண்டலத்தின் ஆட்சியாளர்களாகத் திகழ்ந்தனர். கி.பி. 1190ல் ஜடாவர்ம குலசேகர பாண்டியன் என்ற பாண்டிய மன்னன் சோழர்களை வென்று பிற்காலப் பாண்டியப் பேரரசை நிறுவினான். கி.பி.1190 முதல் 1312 வரை பாண்டிய நாட்டை ஆண்ட மன்னர்களே 'பிற்காலப் பாண்டியர்கள்' என அழைக்கப்படுகின்றனர். திருமலைக்குன்றின் வடக்குச் சரிவில் குடைவரைக் கோயிலுக்கு அருகில் காணப்படுகின்ற மலைக்கொழுந்தீஸ்வரர், பாகம்பிரியாள் கற்றளிகள் பிற்காலப் பாண்டியர்களின் காலத்தில் அமைக்கப்பட்டு வளர்ச்சியடைந்தவையாகும். இக்கற்றளிகள் எப்போது, யாரால் நிறுவப்பட்டது என்பதைச் சரியாகச் சுட்டும் கல்வெட்டுக்கள் இல்லையென்றாலும், கோயிலின் தெற்குப் பிரகாரத்திலுள்ள பாறையில் வெட்டப்பட்டுள்ள ஜடாவர்ம குலசேகர பாண்டியனின் (1190-1218) 4,5வது ஆட்சியாண்டு (கி.பி 1194, கி பி 1195) கல்வெட்டுக்கள் இக்கோயில் கி.பி 1194லிருந்து திகழ்ந்து வந்ததென்பதனைத் தெரிவிக்கின்றன. எனவே மலைக்கொழுந்தீஸ்வரர் திருக்கோயில் ஜடாவர்ம குலசேகர பாண்டியனால் கட்டப்பட்டிருக்கலாம்.

## மலைக்கொழுந்தீஸ்வரர் கற்றளி

சிவனுக்காக எழுப்பப்பட்ட இக்கோயில், சதுரவடிவ கருவறைபத்தையும்லயயும், நீள் சதுரவடிவ அர்த்தமண்ட

கொண்டுள்ளது கருவறையும் அர்த்தமண்டபமும் எளிய அதிட்டானத்தின் மீதுக் கட்டப்பட்டுள்ளன. கிழக்கு நோக்கிய கருவறையின் உள்ளே லிங்க வடிவில் சிவன் மூலவராக வீற்றிருக்கிறார். கருவறையைச் சுற்றி அதன் வெளிப்புறத்தில் மூன்று தேவகோஷ்டங்கள் காணப்படுகின்றன. அவற்றில் தென்புறத்தில் தட்சிணாமூர்த்தியும் வடப்புறத்தில் துர்க்கையும் காணப்படுகின்றனர். இத்தற்றளியின் நுழைவாயிலில் துவாரபாலகர்கள் காணப்படவில்லை. மாறாக நுழைவாயிலின் இடதுபுறத்தில் துவாரகணபதியும், வலதுபுறத்தில் தண்டபாணியும் காட்சியளிக்கின்றனர். நுழைவாயிலின் மேலே கஜலெட்சுமியின் திருவுருவம் அமைக்கப்பட்டுள்ளது. கற்றளியின் எதிரே உள்ளே மகாமண்டபத்தில் நந்தியும், பலிபீடமும் அமைக்கப்பட்டுள்ளன. அர்த்தமண்டபத்தின் வடப்புறத்தில் சண்டேஷ்வரர் வீற்றிருக்கிறார். புதுப்பிக்கப்பட்ட இக்கோயிலின் விமானம், இருதளத்தைக் கொண்ட நாகர வகையினை சார்ந்ததாகும். இக்கோயிலின் தூண்களில் காணப்படுகின்ற கல்வெட்டுக்கள் இறைவனை 'திருமலை பெருமான்' எனக் குறிப்பிடுகின்றன.

## பாகம்பிரியாள் கற்றளி

அம்மனுக்கு எழுப்பப்பட்ட இக்கற்றளி சதுரவடிவ கருவறையையும் அர்த்தமண்டபத்தையும் கொண்டுள்ளது. கருவறையின் வெளிப்புற சுவரில் மூன்று தேவகோஷ்டங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இக்கற்றளியும் எளிய அதிட்டானத்தின் மீது கட்டப்பட்டுள்ளது. கருவறையின் உள்ளே 'துவிபங்க' நிலையில் பாகம்பிரியாள் நின்ற கோலத்தில் காட்சியளிக்கிறாள். அவருடைய வலதுகரம் மலரைப்பற்றியுள்ளது; இடதுகரம் தொங்கியநிலையில் உள்ளது. தெற்கு நோக்கியவாறு கட்டப்பட்டுள்ளது இக்

சுற்றளி மலைக்கொழுந்தீஸ்வரர் திருக்கோயிலுக்கு வடகிழக்கில் அமைந்துள்ளது. அம்மன் கோயிலின் விமானமும் புதுப்பிக்கப்பட்டுள்ளது. இருதளத்தைக் கொண்ட இவ் விமானமும் நாகர வகையைச் சார்ந்தே.

மலைக்கொழுந்தீஸ்வரர் சுற்றளியின் தென்மேற்கு மூலையில் முக்குறுணி விநாயகர் சன்னதி அமைந்துள்ளது. சன்னதியின் தாழ்வாரத்தில் சப்த மாதர்களின் சிலையும் மகிஷாசுரமர்த்தினியின் சிலையும் காணப்படுகின்றன. சுற்றளியின் வடமேற்கு மூலையில் சுப்பிரமணியர் சன்னதியும், வடகிழக்கு மூலையில் பைரவர் சன்னதியும் காணப் படுகின்றன. பாகப்பிரியாள் சன்னதியின் கிழக்குப்பக்கத்தில் நவகிரகங்கள் அமைந்துள்ளன. மேலும் சுற்றளியின் கிழக்கு நுழைவாயிலுக்கு அருகில் இடப்புறம் சந்திரனும் வடப்புறம் சூரியனும் காணப்படுகின்றனர். சந்திரனுக்கு அருகில் திருமலையின் காவல் தெய்வமான கருவ பாண்டியன் நின்றநிலையில் காட்சியளிக்கிறார். சிவகங்கை சீமையின் ஆளுகைக்குட்பட்ட அரசவைப் பிரதிநிதியாக இருந்து திருமலையை நிர்வகித்த அவர், கள்ளர் மரபினராம். மல்லவராயன் கோட்டை அம்பலகாரரான அவரது காலம் 18 ஆம் நூற்றாண்டு எனக் கொள்ளலாம். இக் கோயிலுக்கு கிழக்கிலும் வடக்கிலும் நுழைவாயில்கள் உள்ளன. கோயிலின் கிழக்கு நுழைவாயிலுக்கு வெளிப் புறத்தில் விநாயகர்சன்னதி ஒன்று காணப்படுகிறது.

பழங்காலந்தொட்டே திருமலைக்குன்றில் சித்தர் இருந்து வந்ததாகவும் இருப்பதாகவும் சொல்லப்படுகிறது. சிவன் உறைந்துள்ள இம்மலையில் வாழும் விஷ ஜந்துக்கள் பக்தர்கள் யாரையும் என்றும் தீண்டியதில்லை எனக்கூறப் படுகிறது குன்றின் வடக்கில் அமைந்துள்ள தாமரைக் குளம் 'சேங்கை' (சிவகங்கை-சிவனுடையகங்கை) என்று-

அழைக்கப்படுகிறது. பெண்கள் இக்குளத்தில் நீராடி மலை யைச் சுற்றி ஏழுவாரம் பிரகாரம் வந்து மலைமேல் உள்ள மங்கை பாகருக்கு விசேஷ வழிபாடு செய்தால் அவர்-களுக்கு விரைவில் திருமணம் நடககுமென்று நம்பப்படு கிறது. மேலும் இக்கோயிலிலுள்ள துர்க்கை அம்மனுக்கு பெண்கள் ராகு காலத்தில் செவ்வாய் மற்றும் வெள்ளிக் கிழமைகளில் விளக்கேற்றி வழிபட்டால் திருமணம் விரை வில் நடக்குமென்று நம்பப்படுகிறது. இக்கோயிலின் பூசை வழிபாட்டை ராமலிங்ககுருக்கள், சுப்புகுருக்கள் சந்ததி யினரே பரம்பரையாக செய்து வருகின்றனர். அவர்களின் இறைப்பணி எல்லையற்றதாகும்.

—o—

# 4. கல்வெட்டுத் தொகுதி

திருமலை மலைக்கொழுந்தீஸ்வரர் கோயிலில் காணப் படுகின்றன கல்வெட்டுக்கள் பிற்காலப் பாண்டியர்களைப் பற்றியும், அவர்கள் காலத்து சமுதாயம், பண்பாடு, அரசியல், சமயம் பற்றியும் தெரிவிக்கின்றன. கிபி. 1924 ல் இக்கோயிலுள்ள 32 கல்வெட்டுக்களும் படிக்கப்பட்டு அவற்றின் செய்திக்குறிப்புக்கள் அவ்வாண்டு அறிக்கை (Annual report of Epigraphy 1923-24) யில் 10 முதல் 41 முடியும் எண்களாக வெளிவந்துள்ளன. 32 கல்வெட்டுக் களுமே தமிழ் எழுத்தில் பொறிக்கப்பட்டுள்ளன திரு-மலையில் காணப்படுகின்ற ஜடாவர்ம குலசேகர-பாண்டியன் (கி. பி. 1190—1218/19), மாறவர்ம சுந்தர-பாண்டியன் (கி. பி. 1216—1238), மாறவர்ம விக்கிரம-பாண்டியன் (கி. பி. 1218—1232), மாறவர்ம சுந்தர பாண்டியன் (II) (கி. பி. 1238—1255), ஜடாவர்ம வீரபாண்டியன் I (கி.பி. 1253—1283), ஜடாவர்ம பராக்கிரம பாண்டியன் (கி.பி. 1357—72) போன்ற பிற்காலப் பாண்டிய அரசர்களின் கல்வெட்டுக் குறிப்புக் களைச் சுருக்கமாக காண்போம்.

| அரசர் | கல்வெட்டுக் காணப் படும் இடம் | ஆட்சி ஆண்டு | குறிப்பு |
|---|---|---|---|
| ஜடாவர்ம குலசேகர பாண்டியன் (கி.பி 1190-1218/19) | மலைக்கொழுந்தீஸ்வரர் கோயிலின் தெற்குப் பிரகாரத்திலுள்ள பாறையிலுள்ள கல்வெட்டு | 4வது | இக்கல்வெட்டு, கோயிலின் அர்த்தசாம பூசைககாக நிலங்கள் சிலவற்றை நிவந்தமாக அளித்தமையைக் குறிக்கிறது. |
| ,, | ,, | ,, | இக்கல்வெட்டு, தனிநபர் ஒருவர் கோயிலிலிருந்து நிவந்தமாக பெறப்பட்ட நிலத்திற்குரிய வரியை மடப்பள்ளிச் செலவிற்கு அளித்ததைக் கூறுகிறது. |
| ,, | ,, | 5வது | சேதமடைந்த இக்கல்வெட்டு, அளகை மாநகரைச் சார்ந்த தேவரடியார் ஆண்டபிரான் என்ற திருவெண்காட்டு நங்கை அளகைமாநகரிலிருந்த 'சூரதேவ ஈஸ்வரமுடையார்' என்ற கோயிலில் சண்டேஸ்வரர் திருவுருவத்தை நிறுவியதையும் குன்றத்தூர் நாயனார் கோயிலில் திருஞானசம்பந்தரின் திருவுருவத்திற்கு முற்றம் அமைததையும் தெரிவிக்கிறது. இவ்விறைத்தொண்டினைப பாராட்டி அவளுக்குமரியாதையும் சலுகையும் அளித்ததைக் குறிக்கிறது. |

| | | | |
|---|---|---|---|
| ,, | ,, | ,, | இக்கல்வெட்டு, திருமறை நாச்சி என்ற திருஞானசம்பந்த நங்கை. தன்னால் நிறுவப்பட்ட ஆளுடையப் பிள்ளையாரின் பூசைக்கும் வழிபாட்டிற்கும் தென்பரப்பு நாட்டிலுள்ள ராஜேந்திர சோழ சதுர்வேதிமங்கலத்திலுள்ள நிலங்கள் சிலவற்றை நிவந்தமாக அளித்தாள் என்பதைக் குறிக்கிறது |
| ,, | குடைவரைக் கோயிலின் படிகளுக்கு இடதுபக்கம் | 6வது | இக்கல்வெட்டு கோயில் நிலங்களுக்கு வரிவிலக்கு அளிக்கப்பட்டதைத்தெரிவிக்கிறது |
| ,, | மலைக்கொழுந்தீஸ்வரர் கோயிலின் தெற்குப்பிரகாரத்திலுள்ள பாறையிலுள்ள கல்வெட்டு | ,, | இக்கல்வெட்டு, ஜடாவர்ம குலசேகர பாண்டியன், தன்னுடைய சொந்த நிலங்களிலிருந்து சிலவற்றை கோயிலின் காலை நேர பூசைக்காக அளித்தான் என்பதைக் கூறுகிறது. |
| ,, | மலைக் கொழுந்தீஸ்வரர் கோயிலின் தெற்குப் பிரகாரத்திலுள்ள பாறையிலுள்ள கல்வெட்டு | ,, | இக்கல்வெட்டு. கோயிலின் அன்றாட வழிபாட்டிற்காக வண்ணனேம்பல் என்ற சிகரணநல்லூர் கிராமத்தை தனி ஒருவர் நிவந்தமாக அளித்ததைக் குறிக்கிறது. |

| | | | |
|---|---|---|---|
| ,, | குடைவரைக் கோயி லின் அடித்தளத்தில் | 10வது | முழுவதும் சேதமடைந்துள்ள இக்கல் வெட்டு நிலங்கள் சிலவற்றை கோயிலுக் குத் தானபாக அளித்ததைக் குறிக்கிறது. |
| [illegible] | குடைவரைக் கோயி லின் படிகளுக்கு வலதுபக்கம் | ,, | இக்கல்வெட்டு, அளகை மாநகரிலிருந்த பஞ்சவன் மாதேவி பெருந்தெருவில் வசித்த தன்மாடாவளவர்கள், தங்களதுஒவ்வொரு எண்ணெய் செக்கிலிருந்து நாளும் ஒரு கரண்டி எண்ணெயை குன்றத்தூர்நாயனார் கோயிலுள்ள நந்தாவிளக்கிற்கு உபயம் அளிப்பதாக ஒப்பந்தம் செய்ததைக் குறிக்கிறது. |
| [illegible] | தெற்குப் பிரகாரத்தி லுள்ள பாறையி லுள்ள கல்வெட்டு | 14வது | இக்கல்வெட்டு, கோயிலில் நந்தா விளக்கு நிறுவுவதற்காக நிலங்களை தான மாக வழங்கியதைக் குறிக்கிறது. |
| [illegible] | பிரகாரத்தின்வடக்கு தாழ்வாரத்தில் | 22வது | முழுவதும் சேதமடைந்துள்ள இக் கல்வெட்டு, கோயில் நிலங்கள் சிலவற்றை விற்றதைக் குறிக்கிறது. |
| [illegible] | பிரகாரத்தின் கிழக்கு தாழ்வாரத்தில் | ,, | முற்றுப்பெறாத இக்கல்வெட்டு, கோயில் திருவிழாக்கொண்டாட்டத்திற்காக நிலங் களைப் பெண்ணொருத்திக்கு விற்றதைக் குறிக்கிறது. |

| | | | |
|---|---|---|---|
| ,, | தெற்குப்பிரகாரத்தி லுள்ள பாறையி லுள்ள கல்வெட்டு | 27வது | இக்கல்வெட்டு, கோயிலில் நந்தாவிளக்கு எரிப்பதற்காக, வடகளவழிநாட்டிலிலுள்ள அளகைமாநகரைச் சார்ந்த பெண்ணொ- ருத்தி இருஅச்சு நாணயங்களை தானமாக வழங்கியதைக் குறிக்கிறது. |
| ,, | ,, | காலம் குறிக்கப் படவில்லை | இக்கல்வெட்டு, திருமலை பிள்ளையார்க்கு நிலங்களைத் தானமாக அளித்ததைச் சுட்டுகிறது. |
| ,, | ,, | ,, | இக்கல்வெட்டும் நிலங்களைத் தானமாக அளித்ததைக் குறிக்கிறது. |
| மாறவர்மசுந்தர பாண்டியன் (கிபி (1216-1238) | பாகம்பிரியாள் சன்னதியில் மேற்கு, வடக்கு உட்சுவர் களில் | 9வது | முற்று பெறாத இக்கல்வெட்டு, பாதியில் நின்று விட்டது. |
| ,, | குடைவரைக் கோயி லின் நுழைவாயிலின் அடித்தளத்தில் | | ஆடவலகூத்தன் என்ற குருகுலராயர் இறைவனின் அன்றாட புனித நீராட்டு தலுக்கு வடகளவழி நாட்டிலுள்ள பூற்குழி கிராமத்தின் நிலங்கள சிலவற்றை நிவந்த மாக அளித்ததைக் குறிக்கிறது. |

| | | | |
|---|---|---|---|
| ,, | பாகம்பிரியாள் கோயிலின் கிழக்குச் சுவரில் | 11வது | இக்கல்வெட்டு, கோயிலால் தனிநபருக்கு விற்கப்பட்ட நிலமானது மீண்டும் அவரால் பாகம்பிரியாளின் வழிபாட்டிற்காக நிவந்தமாக அளிக்கப்பட்டதைக் கூறுகிறது சோழியநற்பழங்காசு மற்றும் வீரபாஞ்சரன் காசினைப்பற்றிய குறிப்பு காணப்படுகிறது. |
| ,, | மலைக்கொழுந்தீஸ்வரர் கற்றளியைச் சுற்றி | 17வது | இக்கல்வெட்டு, வியாபாரப் பொருட்களின் மீதான வரியை, மக்கள் கோயிலின் மண்டபத்தில் கூடி நிர்ணயம் செய்ததைக்குறிப்பிடுகிறது. |
| ,, | மண்டபத்திலுள்ள தூண் ஒன்றில் | ,, | இக்கல்வெட்டு பூழியாடராயர் என்ற ஊருடையான் ஆடவல்லான் கோயிலில் நந்தாவிளக்கு எரிப்பதற்காக ஐந்து சோழிய நற்பழங்காசுகளை வழங்கியதாக கூறுகிறது |
| ,, | கோயிலின் வடக்கு பிரகாரத்திலுள்ள கல் இருக்கை மீது | காலம் குறிக்கப்படவில்லை | இக்கல்வெட்டு, ஆற்றூர் என்ற கிராமம் கோயிலுக்கு தேவதானமாக அளிக்கப்பட்டது என்பதைக் கூறுகிறது. |
| மாறவர்ம விக்கிரம பாண்டியன் (கி.பி.1218-1232 | குடைவரைக் கோயிலின் கிழக்கு சுவரில் | 8வது | இக்கல்வெட்டு, கோயில் நிலங்களுக்கு சில வரிச்சலுகைகள் அளிக்கப்பட்டதைக் குறிப்பிடுகிறது. |

| | | | |
|---|---|---|---|
| மாறவர்ம சுந்தர பாண்டியன் II (கி.பி 1238-1255) | பிரகாரத்தின் வடக்குதாழ்வரத்தில் | 11வது | இக்கல்வெட்டு, குன்றத்தூர் நாயனாரின் அன்றாட புனித நீராட்டுதலுக்கு களவழி நாடாள்வார் என்பவர் நிலங்களை நிவந்தமாக அளித்ததைக் குறிப்பிடுகிறது; |
| மாறவர்ம சுந்தர பாண்டியன் (கி பி 1238-1255) | பிரகாரத்தின்மேற்கு தாழ்வாரத்தில் | 12வது | முற்றுப்பெறாத சிதைந்து போன இக்கல்வெட்டு, மலை மண்டலத்தைச் சார்ந்த ஒருவருக்கு கோயில் நிலம் விற்கப்பட்டதை குறிக்கிறது. |
| ஜடாவர்ம வீர பாண்டியன் கி.பி 1253-1283) | குடைவரைக் கோயிவின் மேற்குச்சுவரில் | 11வது | இக்கல்வெட்டு, ஜெயகொண்ட ஸ்ரீவல்லபன் என்ற வடகளவழிநாடாள்வானுக்கு நிலங்களைத்தானமாக அளித்ததைக்குறிக்கிறது மேலும் அந்நிலங்களுக்கு செலுத்தப்பட வேண்டிய வரி குன்றத்தூர் நாயனாரின் வழிபாட்டிற்கு வழங்கப்பட வேண்டுமென்று கூறுகிறது. இக்கல்வெட்டில் பாண்டிய மன்னனின் அரண்மனை மதுரையில் மாடக்குளத்திற்கு கிழக்கே இருந்ததாகக் குறிப்புக் காணப்படுகிறது. |

| | | | |
|---|---|---|---|
| ,, | மண்டபத்தின் தூணில் | 24வது | இக்கல்வெட்டு, கோயில் தாழ்வாரத்தின் கூரையைக் கட்டுவதற்கான செலவிற்காக நிலகங்கராயன் என்ற நரசிங்கதேவனுக்கு கோயில் நிலங்களையும் ஏரியையும் விற்றதைத் தெரிவிக்கிறது. |
| ,, | குடைவரைக்கோயிலின் மேற்குசுவரில் | காலம் குறிக்கப் படவில்லை | இக் கல்வெட்டில் ஜெயங்கொண்ட சோழப் பெருந்தெரு என்ற தெருவினைப் பற்றிய குறிப்புக் காணப்படுகிறது. |
| ஜடாவர்ம பராக்கிரம பாண்டியன் (கி.பி.1357-72) | பாகம்பிரியாள் சன்னதியின் வடக்கு கிழக்கு, மேற்கு உட்சுவர்களில் | 5வது | மிகவும் சேதமடைந்துள்ள இக்கல்வெட்டு நாமனூர் என்ற புறவரிநல்லூரின் சபையோர் அவ்வூரின் நிலங்கள் சிலவற்றை நடுவில்கூறிலிருந்த பொன்பற்றிக் கிராமத்தைச் சார்ந்த ஒருவருக்கு விற்றத்தைக் கூறுகிறது. |
| ,, | பிச்சாதனர் சன்னதியின் முன்னுள்ள தூணில் | 8வது | இக்கல்வெட்டு, அளகை மாநகரைச்சார்ந்த பெண்ணொருத்திக்கு சில கோயில் நிலங்களின் காராண்மை உரிமையை வழங்கியதைக் குறிக்கிறது. |

| | | | |
|---|---|---|---|
| ,, | மேற்கு உட்சுவரில் | 9வது | இக்கல்வெட்டு, மேற்குறிப்பிடப்பட்ட நிலத்தினை வாங்கியவர் அதைவேறு ஒருவருக்கு விற்றதைக் குறிப்பிடுகிறது. |
| ஜடாவர்ம பராக்கிரம பாண்டியன் (கி.பி1357-72) | பிரகாரத்தின் வடக்குச் சுவரில் | 10வது | இச்கல்வெட்டு கோயில் நிலங்களின், காராண்மை உரிமையை இரண்டு சகோதரர்களுக்கு கோயில் நிர்வாகம் அளித்ததைக் குறிக்கிறது. |
| திரிபுவன சக்கரவர்த்தி கோனேரிமாய் கொண்டான் | மண்டபத்திலுள்ள தூணில் | 13வது | இக்கல்வெட்டு, திருமலை·பெருமாள் கோயில் உட்பட மூன்று கோயில்களின் நிலங்களுக்கு வரிவிலக்கு அளிக்கப்பட்டதைக் குறிக்கிறது. |

# 5. பிற்சேர்க்கை

## மகிஷாசுரமர்த்தினி

திருமலைக் குடைவரைக் கோயிலுக்கு வெளிப்புறம் மகிஷாசுரமர்த்தினியின் அரிய சிற்பமொன்று காணப்படுகிறது. இச் சிற்பமானது தனிக்கல்லினால் செய்யப்பட்ட சலைப்படைப்பாகும். குடைவரைக் கோயிலுக்கு அருகே அமைந்துள்ள மலைக்கொழுந்தீஸ்வரர் சுற்றளியைச் சுற்றி வலம் வருபவர்கள் இதனைக் காணலாம்.

மகிஷன் என்ற எருமைத்தலைக் கொண்ட அசுரனைச் சிரச்சேதம் செய்யத் துர்க்கை எடுத்த வடிவமே மகிஷாசுரமர்த்தினி என்றழைக்கப்படுகிறது. அவளுக்கு தேவி, காளி, மாகாளி, சண்டி, குமாரி, கபாலி, காத்யாயினி விஜயா என்ற பெயர்களும் உண்டு. மகிஷாமதி என்ற எருமைத் தாய்க்குப் பிறந்த கொடிய அசுரனே மகிஷன் ஆவான். தன்னுடைய பலங்கொண்டு தேவர்களுக்கு அதிக இன்னல்களை விளைவித்து வந்தான். தேவர்களைக் காக்கும் பொருட்டு தேவாதிதேவர்கள் தங்களுடைய ஆற்றல் (சக்தி) அனைத்தையும் ஒன்று சேர்த்துத் துர்க்கையை உருவாக்கினர். பின்னர் அவர்களால் உருவாக்கப்பட்டவளுக்குத் தங்களுடைய ஆயுதங்களையே போர்க்கருவிகளாக வழங்கினர். துர்க்கை, சிங்க வாகனத்திலேறி, மகிஷனோடு கடும்போர்புரிந்து, அவனுடைய தலையைக் கொய்ததாகப் புராணம் கூறும்.

துர்க்கையின் வடிவிற்கும் மகிஷாசுரமர்த்தினியின் வடிவிற்குமிடையே சிறிய வேறுபாடுள்ளது. துர்க்கையின் வடிவில், தேவி பத்மத்தின் மீதோ பீடத்தின் மீதோ தரையின் மீதோ நின்றவாறு அமைக்கப்பட்டிருப்பாள்

சில சமயங்களில் அவளுக்கு அருகில் அடியவர்கள் மண்டியிட்டு இருக்க அதில் சிலர் தங்களின் தலையை அரிந்து துர்க்கைக்குப் பலி கொடுப்பதைப் போன்று அமைக்கப் பட்டிருக்கும். மேலும், பொதுவாக, துர்க்கை நான்கு கரங்களை ஏந்தியவண்ணம்காட்சியளிப்பாள். அவளுடைய மேற்கரங்கள் சங்கு மற்றும் சக்கரத்தையும் கீழ்க்கரங்கள் வரத மற்றும் அபய முத்திரையையும் கொண்டுள்ளன. எட்டுக் கரங்களையுடைய துர்க்கையின் சிற்பங்களும் உண்டு. மகிஷாசுரமர்த்தினியின் வடிவில், தேவி எருமைத் தலையின் மீது நின்றவாறு காட்டப்பட்டிருப்பாள். அவள் எட்டு அல்லது அதற்கு மேற்பட்ட கரங்களைத் தாங்கிய வாறு அமைக்கப்பட்டிருப்பாள். தேவிக்கு அருகில் அவளுடைய சிங்கவாகனம் செதுக்கப்பட்டிருக்கும். சில அரிய சிற்பங்களில் சிங்கத்துடன் மானும் உருவாக்கப்பட்டிருக்கிறது. தன்னுடைய கரங்களில் சங்கு, சக்கரம், கேடயம் வில், அம்பு, சூலம், வாள், கத்தி போன்ற ஆயுதங்களைத் தாங்கிய வண்ணம் காட்சியளிப்பாள். சிங்கத்தின் மீது ஏறி தன்னுடைய பரிவாரம் சூழ, எருமைத்தலை அரக்கனுடன் போர்புரியும் மகிஷாசுரமர்த்தினியின் அரிய சிற்பத்தொகுதி ஒன்று மல்லை மகிஷாசுரமர்த்தினி குகைக்கோயிலில் காணப்படுகிறது

ஆரியர்கள் வழிபடும் துர்க்கையே பண்டையதமிழர்கள் வணங்கிய கொற்றவை எனக் கருதப்படுகிறது. தொல்காப்பியர் காலத்தில் கொற்றவை மறத் தொழில் புரியும் வீரர்கள் வணங்கும் தெய்வமாகத் திகழ்ந்தாள். சங்க இலக்கியங்களில் இவ்விறைவி பாலை நிலத்திற்குரிய தெய்வமெனவும், போரில் வெற்றியைக் கொடுப்பவளெனவும், எல்லா வல்லமையும் படைத்த இவள் பெருங்காட்டிலுறைபவள் என்றும் கூறப்பட்டுள்ளது. சிலப்பதிகார காலத்தில் கொற்றவை வழி-

பாடு மிகச் சிறந்திருந்ததை வேட்டுவவரிப் பகுதியில் காணலாம் இவ்விறைவி நஞ்சுண்டு கறுத்த கண்டத்திலையும், கையினில் சூலத்திலையும், யானையின் தோலினை ஆடையாகவும்; சிங்கத்தின் தோலினை மேகலையாகவும். சிலம்பு கழல் முதலியவற்றைக் காலணிகளாகவும் அணிந்து, மகிஷாசுரன் தலையின் மீது நிற்பவள் என்று குறிப்பிடப்பட்டுள்ளது அக்கால வேட்டுவ மக்கள் இத்தெய்வத்திற்கு வணணம், சுண்ணம், நறுஞ்சாந்த, பொரி, பூ முதலியன படைத்து வழிபட்டதனைச் சிலப்பதிகாரத்தால் அறிகிறோம். மணிமேகலை, பெருங்கதை, தேவாரம் கம்பராமாயணம் போன்ற இலக்கியங்களும் கொற்றவையைப் பற்றி இயம்புகின்றன சிலப்பதிகாரமும் மேற்கூறிய இலக்கியங்களும் கொற்றவை கலையினைத் (மானை) தன் ஊர்தியாகக் கொண்டவளென்று கூறுகின்றன. எனவே சிலப்பதிகாரக் காலந்தொட்டே சிங்கம் மட்டுமல்லாதுகலையும் கொற்றவையின் ஊர்தியாகக் கருதப்பட்டது என்பதில் சிறிதும் ஐயமில்லை.

தமிழகத்தில் முதன்முதலாகப் பல்லவர்கள் துர்க்கை மற்றும்மகிஷாசுரமர்த்தினியின் உருவங்களைக்கலைவடிவில் படைத்தனரெனலாம். பல்லவர்களால் உருவாக்கப்பட்ட மல்லை வராக, ஆதிவராக,மகிஷாசுரமர்த்தினி மண்டபங்களிலும், காஞ்சி ஐராவதேஸ்வரர்கோயிலிலும் இச்சிற்பங்களைக் காணலாம். பல்லவர்களைப் பின்பற்றி முற்காலப் பாண்டியர்களும். சோழர்களும் துர்க்கை மற்றும மகிஷாசுரமர்த்தினியின் சிற்பங்களை உருவாக்கினர். இதற்குச் சான்றாக மலையடிப்பட்டி, குன்றக்குடி, திருப்பரங்குன்றம், திருமலை (அனைத்தும் பாண்டிய நாட்டில்) புள்ளமங்கை, புஞ்சை (சோழ நாட்டில்) போன்ற இடங்களில் மேற்கூறிய சிற்பங்கள் அழகுற வடிக்கப்பட்டுள்ளது.

பொதுவாக மகிஷாசுரமர்த்தினியை எருமைத்தலை மீது நின்றவாறு, பல்வேறு போர்க்கருவிகளைத் தாங்கிய வாறு அமைப்பது மரபாகும். இவ்வாறு அமைக்கப்பட்ட சிற்பங்களில் இறைவிக்கு அருகில் சிங்கம் பொறிக்கப் பட்டோ, பொறிக்கப்படாமலோ இருக்கும். மிகவும் அரிய சிற்பங்களில் மகிஷாசுரமர்த்தினியின் அருகே சிங்கத்துடன் மானும் பொறிக்கப்பட்டுள்ளது. (மல்லை மகிஷாசுரமர்த்தினி மண்டபத்தில் துர்க்கை சிங்கவாகனத்திலேறி எருமைத்தலை அரக்கனுடன் போர் புரிவதைப் போன்ற அழகிய காட்சி சிற்பமாக செதுக்கப்பட்டுள்ளது). சிங்கத்துடன் மானையும் பொறித்தமைக்குப் பல காரணங்கள் கூறப்பட்டாலும் துர்க்கை வீரத்தில் சிறந்தவள் என்பதையும், கொடியவர்களை அழிக்கும் வலிமை படைத்தவள் என்பதையும், குறிக்கக் கொடிய விலங்காகிய சிங்கத்தினையும், அன்புள்ளமும் கருணையும் கொண்டு உலகைக் காக்கும் தாயானவள் என்பதைக் குறிக்க மென்மைத் தன்மையுடைய விலங்காகிய மானையும் ஊர்திகளாகக் கருதியிருக்கலாம். (மானையும் பெண்டிரையும் தமிழ் இலக்கியங்களில் ஒப்பிட்டுள்ளமையை இங்குக் குறிப்பிடத்தக்கதாகும்). இவ்வாறு கொற்றவையின் குணங்களாகிய வீரத்தினையும் மென்மை (கருணை)யினையும், குறிப்பதற்காகவே சிங்கம், மான் ஆகிய விலங்குகள் ஊர்திகளாக்கப்பட்டிருக்க வேண்டுமென்று கருத இடமுள்ளது. அத்தகைய அரிய கலைப்படைப்புகள் மல்லைவராக, ஆதிவராக மண்டபங்களிலும் காஞ்சி ஐராவதேஸ்வர், திருமலைமலைக்கொழுந்தீஸ்வரர், புள்ளமங்கை மற்றும் புஞ்சை கோயில்களிலும் காணப்படுகின்றன. மேற்கூறிய கோயில்களில் வராக, ஆதிவராக மண்டபங்களிலும் புள்ள மங்கை கோயிலிலும் சிங்கத்தின் தலையும் மானின் தலையும் மட்டுமே பொறிக்கப் பட்டுள்ளன. ஆனால் காஞ்சி ஐராவதேஸ்வர், திருமலை

மலைக்கொழுந்தீஸ்வரர் மற்றும் புஞ்சை கோயில்களில் மட்டுமே இவ்விரு ஊர்திகளும் ஏறக்குறைய முழுமையாக வடிக்கப்பட்டுள்ளன.

திருமலையில் காணப்படுகின்ற மகிஷாசுரமர்த்தினி சமபாதஸ்தானகத்தில் மகிஷனின் (எருமை) தலை மீது நிற்கிறாள். அவளுக்கு வலப்புறம் சிங்கமும், இடப்புறம் மானும் பக்கவாட்டுக் கோணத்தில் இறைவியை நோக்கித் திரும்பியவாறு அமைக்கப்பட்டுள்ளன. மகிஷாசுரமர்த்தினி கரந்த மகுடம், குசபந்தம், குண்டலம், கேயூரம், கங்கணம் போன்ற அணிகலன்களை அணிந்துள்ளாள். அவள் அணிந்துள்ள கீழ் ஆடையின் மீது கட்டப்பட்டிருக்கும் கடிபந்தத்தின் நுனிப்பகுதிகள் அவளின் இருபுறமும் தொங்கிய நிலையில் காணப்படுகின்றன. எண்கரத்தினை யுடைய மகிஷாசுரமர்த்தினி, இடப்புறக்கைகளில் சங்கு வில், கேடயம் போன்ற ஆயுதங்களையும், வலப்புறக்-கைகளில் திரிசூலம், கத்தி, வாள் போன்ற ஆயுதங்களையும் தாங்கியவாறு காட்சியளிக்கிறாள். அவளின் மற்றொரு இடப்புறக்கை ஊருஹஸ்தத்திலும், வலப்புறக்கை கடிய வலம்பித ஹஸ்தத்திலும் காணப்படுகின்றன

சிற்பத்தின் பாங்கு, ஆடை மற்றும் அணிகலன்களின் அமைப்பைக் கொண்டு இதனை முற்காலப் பாண்டியர் களின் சிற்பம் என்று தெளிவாகக் கூறலாம். வியக்கத்தக்க வகையில் இச்சிற்பத்தில் அதிகமான அளவு பல்லவர்காலச் சிற்பங்களின் இயல்புகள் இருப்பதை உணர முடிகிறது. மிகுதியாகச் சேதமடைந்துள்ள நன்கு பேணப்படாத இச்சிற்பத்தைக் காத்தல் என்பது நாம் கலைக்குச் செய்யும் தொண்டாகும்.

## கிராமத் தெய்வங்கள்

மதுரைக்கு வடக்கிலுள்ள மாவட்டங்களில் ஐயனார் கறுப்பன், முனியன், பேயன், ரேணுகா, செல்லியம்மன், முதலிய கிராமத் தெய்வங்கள் வழிபாட்டிற்குரியன வாகத் திகழ்கின்றன. திருமலையில் மலைக்கொழுந்தீஸ்வரர், பாகம்பிரியாள் தவிர கிராமத் தெய்வங்கள் சிலவும் மக்களால் வணங்கப்பட்டு வருகின்றன திருமலைக்குன்றின் கிழக்கு அடிவாரத்தில் கடம்புவன ஐயனார்காளி கோயில் காணப்படுகின்றன. குன்றின் தெற்கே பட்டவன்கோயிலும் மேற்கே (கோனேரி கண்மாய் மடையில்) கருப்பர் கோயிலும் அமைந்துள்ளன. குன்றின் வடக்கே சிறிது தொலைவில் (பூலான்குடி கண்மாயின் கிழக்குக்கரையில்) முனியன், கருப்பர் கோயிலும் காணப்படுகின்றன.

கிராமப்புற மக்களது பண்பாட்டினை அவர்களது தெய்வ வழிபாட்டினிலிருந்து ஓரளவு அறிய முடியும். இத்தெய்வங்களைத் தவறாது வழிபட்டு வந்தால் நோய் துன்பம் முதலிய குறைகள் தவிர்க்கப்படும் என்று மக்கள் நம்பிக்கை கொண்டுள்ளார்கள் இயக்கியன்னையை வணங்கினால் மகப்பேறுகிடைக்கும் என்ற எண்ணத்தால் மகப்பேறற்றோர் வழிபாடு செய்கின்றனர். தங்களுக்குப் பிறக்கும் குழந்தைகளுக்கு கிராம தெய்வங்களின் பெயரை இடுதல் சில பகுதிகளில் வழக்கமாக உள்ளது. உயிர் வாழ்வதற்கு உணவு இன்றியமையாததால் பயிர்த் தொழில் செய்யுமுன்னரும் அறுவடை செய்த பின்னரும் இத்தெய்வங்களுக்குத் தனி வழிபாடு நடத்தப்படுகிறது. மழையின்மை, பஞ்சம், தொற்றுநோய் முதலியன ஏற்பட்டால் இத்தெய்வங்களுக்குப் பலி கொடுத்து விழா கொண்டாடப்படுகிறது. நீதிமன்றங்களுக்குக் கொண்டு செல்லப்பட வேண்டாத சில வழக்குகளை ஊரிலுள்ள

பெரியோர்கிராமதேவதைக்கோயில்களில் கூடிப்பரிசீலனை செய்து தீர்ப்பு வழங்குவதை இன்றளவும் காணலாம். சில சமயங்களில் உண்மையறிவதற்கு இத்தெய்வங்களின் முன்னிலையில் 'சத்தியம் செய்தல்' வழக்கமாக உள்ளது. கிராமமக்கள் ஒற்றுமையுடன் கூடி வாழவேண்டும் என்ற நல்லெண்ணத்தின் அடிப்படையில்தான் ஆண்டுக்கொரு முறை திருவிழா கொண்டாடப்படுகிறது.

## கருவபாண்டியன்

மலைக்கொழுந்தீஸ்வரர் கோயிலின் முகமண்டபத்தின் தெற்கு மூலையில் கம்பீரமாக நின்ற நிலையில் காட்சியளிக்கும் கருவ பாண்டியன் கள்ளர் மரபினரால் போற்றப்பட்டு வரும் மாவீரர் ஆவார். இவருடைய பூர்வீகம் மல்லவராயன்கோட்டை எனக் கூறப்படுகிறது. கருவ பாண்டியனைப் பற்றி தக்க ஆதாரங்கள் கிடைக்காததால் அவரின் காலத்தையும் வரலாற்றையும் நன்கு அறிய முடியவில்லை. கருவபாண்டியனின் வம்சாவழியினர் சிலரிடம் இருப்பதாகக் கூறப்படும் ஓலைச்சுவடிகளை ஆய்ந்தால் அவ்வீரரைப் பற்றிய செய்திகளை நம்மால் திரட்ட முடியும். கருவபாண்டியனின் சிற்பத்தை நன்கு நோக்கினால் பருத்த கொண்டை, பானை போன்ற வயிற்றமைப்பு, முறுக்கியமீசை முதலியன, சிற்பம் 17 வது அல்லது 18வது நூற்றாண்டைச் சார்ந்ததாகக்காட்டுகிறது.

## சுடுமண் பொம்மைகள்

திருமலைக் குன்றின் உச்சியில் பழங்கால ஓவியங்கள் வரையப்பட்டுள்ள குகைகளுக்கு அருகில் பண்டைய காலத்து உடைந்த சுடுமண் பொம்மைகளும் கீரிடமும் கள ஆய்வின் போது கண்டறியப்பட்டுள்ளன. மேலும் நன்கு சுடப்பட்ட செந்நிற பானை ஓடுகளும் சேகரிக்கப்

பட்டுள்ளன. பானை ஓடுகளில் பதிக்கப்பட்ட அழகு வேலைப்பாடுகள் (முக்கோணத்தின் உள்ளே சிறு வட்டங்கள்) செய்யப்பட்டுள்ளன. சுடுமண் பொம்மைகள் செய்யப்பட்டிருக்கும் விதம், அவைகள் பழங்காலத்தைச் சார்ந்தவையே எனக் கூறும் வகையில் அமைந்துள்ளது. யானையொன்றின் முகம் மற்றும் துதிக்கைப்பகுதியும் நாகமொன்றின் தலைப்பகுதியும், உடைந்த கிரீடத்தின் எஞ்சிய பகுதியுமே கள ஆய்வில் கிடைத்துள்ள சுடுமண் பொம்மைகளாகும்.

—O—



மலைக்கொழுந்தீஸ்வரர்



பாகம்பிரியாள்



முருகன்



மகிஷாசுரமர்த்தினி



சறுக்கும் பாறைக்கு எதிரே
உள்ள குகை ஓவியம்



பம்பரமலைக்கு கிழக்கே அமைந்த
குகையிலுள்ள ஓவியம்



பம்பரமலைக்கு தென்கிழக்கிலுள்ள குகை ஓவியங்கள்



குடைவரைக் கோயிலின் தரை
அமைப்பு (அளவு 1 மீட்டர்
= 1 சென்டிமீட்டர்)

# அடிக்குறிப்புகள்


1. A. R. E No. 11 & 26 of 1923 – 1924

2. R. Venkataraman, 'Indian Archaeology (A Survey)' Ennes Publication, Madurai, 1985, Page 236

3. Erwin Newmayer, 'Pre Historic Cave Paintings of India'

4. R. Venkataraman, Page 230

5. க. சிவராமமூர்த்தி 'இந்திய ஓவியம்', நேஷனல் புக் டிரஸ்ட் ஆப் இந்தியா, புதுதில்லி, பக்கம் 1.

6. R. Venkataraman, Page 238

7. Erwin Newmayer, Figure 126

8. 9. தினமணி தமிழ்மணி, 'நடுகல்லும் பெருங்கற்காலப் பண்பாடும்', கா இராஜன், பக்கம 2.

10. சா. குருமூர்த்தி' 'தொல்பொருளாய்வும் தமிழர் பண்பாடும்', சென்னைப் பல்கலைக்கழகம், 1974, பக்கம் 25

11. R. Venkataraman, Page 129.

12. சா. குருமூர்த்தி, பக்கம் 26.

13. Ibid, பக்கம் 28.

14, 15. Ibid, பக்கம் 29.

16. R. Venkataraman, Page 238.

17. தினமணி தமிழ்மணி, 'நடுக்கல்லும் பெருகற்காலப் பண்பாடும்' பக்கம் 2.

18. T. V. Mahalingam, 'Early South Indian Palaeograp--hy' Madras University, 1974, Page 200.

19. தமிழரசு, '2,200 ஆண்டுகளுக்கு முற்பட்ட தமிழ் கல் வெட்டுகள் கண்டு பிடிப்பு', 16-2-1990 இதழ், பக்கம் 9

20. T. V. Mahalingam, Page 249.

21, 22. Ibid, 200.

23. R. வெங்கட்ராமன்' 'இந்தியக் கோவில் கட்டிடக்கலை வரலாறு', என்னெஸ் பப்ளிகேஷன்ஸ், மதுரை, 1983, பக்கம் 68.

24. A. R. E. No. 10, 20, 33, 36 of 1923 - 1924.

25. ஏ. ஏகாம்பரநாதன், 'தமிழகச் சிற்ப, ஓவியக்கலைகள், தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம்', திருநெல்வேலி, 1984, பக்கம் 93.